19TH APRIL 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 75 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## ஐயூப் அஸ்மினின் கருத்துக்கு உலமா சபை கண்டனம்

### சட்ட நடவடிக்கை குறித்தும் ஆராய்வு!

'LONDON TAMIL TV' என்ற யூடியூப் பக்கத்தில் வெளியான நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் ஐயூப் அஸ்மின் என்பவர் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலோடு சம்பந்தப்பட்ட, அது தொடர்பில் பொறுப்புக் கூறப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் 02ம் பக்கம்பார்க்க...

## ஹம்பாந்தோட்டையில் தேசிய மீலாத் விழா

தேசிய மீலாத் விழா போலவலானையில் நடைபெறும் இவ்வாண்டு தேசிய மீலாத் விழா ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் போலவலானையில் நடைபெறும்.

முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இம்மீலாத் விழா 02ம் பக்கம்பார்க்க...

# உள்ளுராட்சி சபைகளில் கூட்டணி எதிர்க் கட்சிகள் விஷேட பேச்சு

### கொள்கையளவில் இணக்கம்!

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் நிறைவின் பின் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

இது தொடர்பாக இடம்பெற்ற முதற் கட்ட பேச்சுவார்த்தையின் போது சகல எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று ள்ளனர்.

இதன் மூலம் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அரசியல் பிரமுகரொருவர் தெரிவித்தார். எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அதிகமான சபைகளில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரம் கிடைக்காதென எதிர்க்கட்சிகள் நம்புகின்றன.

எனவே தான் கூட்டணி அமைத்து சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற எதிர்க்கட்சிகள் இப்போதே திட்டங்களை வகுக்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பேஸா வீஸா விவகாரம்; ஓரிரு தினங்களில் தீர்மானம்



### பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்வருக்கு குறிப்பாக முகவர் நிலையங்களுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் பேஸா விசா தொடர்பாக இதுவரை இறுதி 03ம் பக்கம்பார்க்க...

## இனவாதத்தை ஒழித்துக்கட்ட கடுமையான நடவடிக்கை

### யாழ். கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு!

தையிட்டி, திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு. இந்த பிரச்சினையை மையப்படுத்தியதாக செயற்படும் வடக்கு அரசியல் மற்றும் தெற்கு அரசியல் நீக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் தான் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண 02ம் பக்கம்பார்க்க...

## வக்பு வாரியங்களில் முஸ்லிம் அல்லாதோர் நியமனம்

### இந்திய உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

அடுத்த விசாரணை தேதி வரை மத்திய வக்பு கவுன்சில் 03ம் பக்கம்பார்க்க...

## தலிபான் ஆட்சி மீதான தடையை நீக்கியது ரஷ்யா!

ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சி மீதான தடையை ரஷ்ய உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது. அந்நாட்டு சட்டமா அதிபர் 05ம் பக்கம்பார்க்க...

## உள்ளூராட்சி மன்ற நிதி ஒதுக்கீடு!

### ஜனாதிபதியின் கருத்து குறித்து திங்கள் ஆராயும் தேர்தல் ஆணைக்குழு!

தேர்தல் ஆணைக்குழு திங்கட்கிழமை (21) கூடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னாரில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வெளியிட்ட அறிக்கை காரணமாக பெறப்பட்ட முறைப்பாடுகளை விசாரணைகளை 02ம் பக்கம்பார்க்க...

## அனைத்து துறைகளிலும் சவூதிக்கு உதவத் தயார்

### ஈரான் உயர் பீடத் தலைவர் ஆயதுல்லா கமேனி



சவுதி அரேபியாவிற்கு ஈரான் அனைத்து துறைகளிலும் உதவ தயாராக உள்ளது என்று ஆயத்துல்லா கமேனி, சவுதி மன்னரின் மகன் பாதுகாப்பு அமைச்சர் இளவரசர் காலித் பின் சல்மானிடம் கூறியுள்ளார்.

வியாழக்கிழமை (17) தெஹ்ரானில் நடந்த சந்திப்பின் போது, சவுதி அரேபியா மன்னரின் மகன் தனது தந்தையிடமிருந்து ஈரானின் உச்ச தலைவருக்கு ஒரு கடிதத்தை வழங்கினார்.

“எங்கள் இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள தலைப்புகள் 03ம் பக்கம்பார்க்க...

## உச்சம் தொட்ட தங்க விலை

உலக அளவில் தங்கத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப, இலங்கையிலும் தங்கத்தின் விலை சாதனை அளவை எட்டியுள்ளது.

இலங்கையில் செட்டியார் தெரு தங்க சந்தையில் 22 கெரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 242,000 ரூபாவாகவும் 24 02ம் பக்கம்பார்க்க...

## குறுகிய அரசியலைக் கைவிட்டு உண்மை கண்டறிய அணி திரள்வோம்



### ஈஸ்டர் தின செய்தியில் சஜித் பிரேமதாச

குறுகிய அரசியல் நோக்கங்களை தள்ளிவைத்து உண்மையைக் கண்டறிவதற்காக அணிதிரளுவோம் - என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஈஸ்டர் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் 05ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## அனைவருக்கும்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடமளிப்பதில்லை. இனவாதம் இவர்களுக்கு தேவை. தொல்பொருள் ஒன்று கிடைத்தால் அது பௌத்தமா அல்லது இந்துவா என்று ஆராய்வது தவறு. இனவாதம் தோற்றம் பெறுவதை தடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க பின்வாங்க போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை (17) நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றியதாவது,

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவு வழங்கிய யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு மனமார்ந்த நன்றி

இதுவே கடந்த கால வரலாறு. இதனூடாக எமது மக்கள் அனைவரும் பிரிக்கப்பட்டார்கள். ஆனால் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் வடக்கு,கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் உள்ள அனைத்து இன மக்களும் தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்தார்கள். இந்த தேர்தலில் மக்கள் ஒன்றுப்பட்டார்கள். நாம் இனி பிரிந்து செல்ல வேண்டிய தேவை கிடையாது. எவரும் சந்தேகத்துடன் வாழ வேண்டிய தேவை கிடையாது.

அனைத்து இன மக்களும் சிறந்த முறையில் வாழும் நாட்டையே நாங்கள் கட்டியெழுப்புவோம். அனைவருக்கும் சமவுரிமை கிடைக்கப்பெறும்.

யுத்தத்தால் என்ன நேர்ந்தது.? வடக்கு மாகாணம் பாரிய பின்னடைவை எதிர்கொண்டது. இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகின. வடக்கிலும், தெற்கிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. இவ்வாறான நிலை மீண்டும் எமக்கு தேவையா,முரண்பட்டுக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது.

எமது தலைமுறை போரிட்டது, முரண்பட்டது. ஆகவே எதிர்கால தலைமுறை போரிடாமலும், முரண்பட்டுக்கொள்ளாமலும் இருக்கும் வகையில் இந்த நாட்டை நாங்கள் கட்டியெழுப்புவோம்.இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கு இடமில்லை. அரசியல்வாதிகளுக்கு தான் இனவாதம் தேவை, மக்களுக்கல்ல, யாழ். திஸ்ஸ விகாரையை மையப்படுத்தியதாக பிரச்சினை காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற ஆலோசனைசார் கூட்டத்தின்போது 'திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு,இந்த பிரச்சினையை மையப்படுத்தியதாக செயற்படும் வடக்கு அரசியல் விலக வேண்டும். இந்த பிரச்சினையை அடிப்படையாக கொண்டு தெற்கில் மேற்கொள்ளப்படும் அரசியல் நீக்கப்பட வேண்டும்.இவ்வாறான அடிப்படையிலான அரசியல் நிலைமை நீக்கப்பட்டால் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்' என்று குறிப்பிட்டேன். விகாரையின் விகாராதிபதி, அந்த பகுதியில் வாழும் மக்கள், நாக விகாரையின் விகாராதிபதி ஆகியோர் ஒன்றிணைந்தால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

அரசியல்வாதிகள் தான் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண இடமளிப்பதில்லை. இனவாதம் இவர்களுக்கு தேவை. எந்த மாகாணத்தினதும், மக்களினதும் உரிமைகளை அரசாங்கம் பறிக்கவில்லை. அவ்வாறு ஒருபோதும் செயற்பட போவதில்லை. இந்த நாட்டில் எவ்விடத்தில் தொல்பொருள் சின்னங்கள், அடையாளங்கள் கிடைக்கப்பெற்றாலும் அவற்றை மதம் மற்றும் இன அடிப்படையில் பார்க்ககூடாது. தொல்பொருளாகவே பார்க்க வேண்டும்.

எங்கேனும் பகுதியில் தொல்பொருள் கிடைக்கப்பெற்றால் முதலில் அது சிங்களமா,தமிழா, பௌத்தமா அல்லது இந்து மதத்துக்குரியதா என்றே பார்க்கப்படுகிறது.இது தவறு. தொல்பொருள் மரபுரிமை அடிப்படையில் தான் அவற்றை பார்க்க வேண்டும். ஆனால் இனவாதிகள் தொல்பொருள் சின்னங்களை பௌத்தமா அல்லது இந்துவா என்றே பார்க்கிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு இனவாதம் வேண்டும். இனவாதிகளை மக்கள் தோற்கடித்தார்கள்.இருப்பினும் அவர்கள் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

இனவாதம் மீண்டும் தலைதூக்குமாயின் அதனை இல்லாதொழிக்க அரசாங்கம் என்ற அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம். எமக்கு தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு அவசியம். யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமான அரசியல் கட்சிகள் இருந்தன. இவ்வாறான நிலையில் தான் வடக்கு மக்கள் எம்மை தெரிவு செய்தார்கள்.இது சிறந்த புதிய மாற்றமாகும்.எம்மீது நம்பிக்கை கொண்டீர்கள். எந்த கடுமையான நிலையிலும் எம்மீது கொண்ட நம்பிக்கையை பலவீனமடைய செய்ய இடமளிக்க போவதில்லை என்றார்.

## உச்சம்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கெரட் தங்கத்தின் ஒரு பவுன் விலை 262,000 ரூபாவாகவும் வரலாற்று உச்சத்தை எட்டியுள்ளது.

நேற்று (16) இலங்கை சந்தையில் 22 கெரட் தங்கத்தின் ஒரு பவுன் விலை 238,300 ரூபாவாகவும், 24 கெரட் தங்கத்தின் ஒரு பவுன் விலை 259,000 ரூபாவாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐயூப்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார்.

குறித்த காணொளியில் அவர் பலரது பெயர்களை சுட்டிக்காட்டியிருந்ததுடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் முஃப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி அவர்களையும் குறிப்பிட்டு, அவர் தீவிரபோக்குகளை எதிர்த்து எந்தவொரு முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லையென பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தினை தோற்றுவிக்கும் வகையில் கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இதனை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வன்மையாக கண்டிப்பதோடு இவ்வாறான சந்தேகங்களை தோற்றுவிக்கும் வகையிலான கருத்துக்களை பரப்புவோர் விடயத்தில் பொதுமக்கள் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

அத்துடன் துறைசார் நிபுணர்களது ஆலோசனைகளுக்கிணங்க இவ்விடயம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ஜம்இய்யா ஆலோசித்து வருகிறது என்பதனையும் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையானது கடந்த 100 வருடங்களுக்கும் மேலாக எல்லாக் காலங்களிலும் நாட்டின் தேசிய பாதுகாப்பு, சகவாழ்வு, சமூகங்களிடையிலான ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்தி வருவதோடு அதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்திருக்கிறது.

அதுமாத்திரமன்றி கடந்த 2015.07.23ஆம் திகதி "ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற தீவிரவாத அமைப்புகள் முற்றிலும் இஸ்லாத்துக்கு முரண்பட்டவை" என்ற பிரகடனத்தை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையும் ஏனைய சமூக அமைப்புகளும் இணைந்து வெளியிட்டன.

மேலும், மார்க்க விவகாரங்களில் இலங்கை முஸ்லிம்களுக்கான ஜம்இய்யாவின் வழிகாட்டல்களும் நிலைப்பாடுகளும் என்ற "மன்ஹஜ்" எனும் நூலில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒழுங்குவிதிகளை சம்பூரணமாக வழங்கியிருப்பதோடு "தீவிரவாதம் வேண்டாம்" என்ற ஒரு நூலையும் வெளியிட்டு நல்லதொரு முஸ்லிம் பிரஜையாக வாழ்வதற்கான அத்தனை வழிகாட்டல்களையும் வழங்கி வந்திருக்கிறது.

அத்தோடு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற முன்னரே 2019.01.03ம் திகதி, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிரதிநிதிகள் குழுவொன்று அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த ஹேமஸ்ரீ பெர்னாண்டோ அவர்களை சந்தித்து தீவிர சிந்தனைப் போக்குடைய அமைப்புகள் குறித்த தகவல்களை வழங்கியதுடன் அவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னரும் ஜனாதிபதி ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து அமர்வுகளிலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மற்றும் பிரமுகர்கள் பல தடவைகள் சமூகமளித்து பங்களிப்புகளை வழங்கியிருக்கிறார்கள்.

மேற்குறித்த யூடியூப் காணொளியில் உள்ளது போன்று சந்தேகங்களை ஏற்படுத்தும் விடயங்களை பொதுவெளியில் பகிர்வதானது சமூகங்களிடையில் நல்லிணக்கம், சகவாழ்வு, ஒற்றுமைக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடாகும்.

நிச்சயமாக உண்மையும், நீதியும் ஒருநாள் வெல்லும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இது தொடர்பிலான உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உறுதியாக நம்புகிறது.

## ஹம்பாந்தோட்டை...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நடைபெறும் என முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




## பேஸா....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் எம் எஸ் எம் நவாஸ் தெரிவித்தார். ஆளும் கட்சி எம்பிக்கள் சிலர் தமக்கு பேஸா விசா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருவதாக தெரிவித்த செய்தி பற்றி பணிப்பாளரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இம்முறை வழமைக்கு மாறாக குறைந்தளவு விசாக்களே அதாவது 35 பேஸா விசாக்களே வழங்கப்பட்டுள்ளன.

இதில் எட்டு விசாக்களை தமக்கு அளிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் அஷ்ஷெய்க். முனீர் முழுப்பர் தெரிவித்தார். இம்முறை இலங்கைக்கு மிகக் குறைந்த அளவு பேஸா விசாக்களே வழங்கப்பட்டிருந்தாலும் இதற்கு முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட பேஸா விசாக்கள் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பேஸா விசாக்களின் எண்ணிக்கையை சவுதி அரேபியா 35 ஆக குறைத்துள்ள நிலையில் விசாக்களை பகிர்ந்தளிப்பதில் திணைக்களம் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. இது தொடர்பாக இன்னும் ஓரிரு தினங்களில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும், ஹஜ் குழுவையும் கூட்டியே இந்த தீர்மானம் எடுக்கப்படும் எனவும் பணிப்பாளர் நவாஸ் தெரிவித்தார்.

இம்முறை புனித ஹஜ் யாத்திரையை நிறைவேற்றுவதற்கு 3500 பேருக்கு கோட்டா கிடைத்திருக்கின்றது. இந்த 3500 பேரினதும் பெயர் விபரங்கள் பதிவு செய்து உறுதி செய்யப்பட்டிருப்பதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## வக்பு....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது மாநில வக்பு வாரியங்களில் எந்த நியமனங்களும் செய்யக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. அதாவது, வக்பு கவுன்சிலில் முஸ்லிம் அல்லாதவரை உறுப்பினராக நியமிப்பதை இந்த உத்தரவு நிறுத்தி வைத்துள்ளது.

வக்பு (திருத்த) சட்டம் (ஒருங்கிணைந்த வக்பு மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மற்றும் மேம்பாடு) கடந்த 8-ம் தேதி அமலுக்கு வந்தது. இந்த சட்டத்தை எதிர்த்து காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, ஏஐஎம்ஐஎம், சமாஜ்வாதி, ராஷ்டிரிய ஜனதா தளம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் சார்பில் மொத்தம் 73 மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில், இந்த சட்டம் அரசியல் சாசனத்துக்கு எதிராக உள்ளது என்றும், இதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார் மற்றும் கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு, வக்பு (திருத்த) சட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணையை நேற்று தொடங்கியது. மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், அபிஷேக் மனு சிங்வி, ராஜீவ் தவன், சி.யு.சிங் உள்ளிட்டோர் ஆஜராயினர். மத்திய அரசு தரப்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜரானார். நேற்றைய விசாரணையின்போது, 3 முக்கிய அம்சங்களை நீதிபதிகள் எழுப்பினர். வக்பு திருத்த சட்டத்தில் இடம்பெற்றுள்ள சில பிரிவுகளுக்கு இடைக்கால தடை விதிக்க விரும்புவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

இடைக்கால தடை விதிப்பதற்கு மத்திய அரசும் சில மாநில அரசுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இது தொடர்பாக தங்கள் தரப்பு வாதத்தை எடுத்துரைக்க கூடுதல் அவகாசம் வேண்டும் என கேட்டனர். இதையடுத்து, இந்த வழக்கு மீதான விசாரணை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என நீதிபதிகள் தெரிவித்தனர். இன்று விசாரணை தொடங்கியதும், இந்த வழக்கில் எந்த இடைக்கால தடை உத்தரவும் பிறப்பிக்க வேண்டாம் என சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வலியுறுத்தினார். இந்த சட்டத்தின் சில விதிகளை நீதிமன்றம் நிறுத்தி வைத்தால் அது ஒரு "கடுமையான நடவடிக்கையாக" இருக்கும் என வாதிட்டார்.

அப்போது தலைமை நீதிபதி சஞ்சய் குமார், "சட்டத்தின் சில விதிகள் நிறுத்தி வைக்கப்படாவிட்டால், களத்தில் நிலைமை மாறக் கூடும். பொதுவாக, ஒரு சட்டத்தை நிறுத்தி வைப்பது அரிது. ஆனால், நிலைமை கடுமையாக மாறக்கூடும் என்று நாங்கள் அஞ்சுகிறோம்" என்று கூறினார். அதற்கு, அடுத்த விசாரணை தேதி வரை வக்பு (திருத்தம்) சட்டம், 2025-இன் பிரிவு 9 மற்றும் 14-இன் கீழ் மத்திய வக்பு கவுன்சில் அல்லது மாநில வக்பு வாரியங்களுக்கு எந்த நியமனங்களும் செய்யப்படாது என சொலிசிட்டர் ஜெனரல் உத்தரவாதம் அளித்தார்.

அவரது உத்தரவாதத்தை ஏற்ற உச்ச நீதிமன்றம், அதனை தனது இடைக்கால உத்தரவாக பதிவு செய்தது. மேலும், பயனர் சொத்துகளின் வக்பு சொத்துக்கள் அனைத்தும் அடுத்த விசாரணை தேதி வரை ரத்து செய்யப்படக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து வழக்கை மே 5-ஆம் தேதிக்கு ஒத்திவைத்த உச்ச நீதிமன்றம், அப்போது சட்டத்தின் அரசியலமைப்பு செல்லுபடித்தன்மைக்கு சவால் செய்யும் மனுக்களுக்கு மத்திய அரசு தனது பதிலை தாக்கல் செய்ய அறிவுறுத்தி உள்ளது.

## அனைத்து....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து நாங்கள் விவாதித்தோம்," என்று அவர் ஓ தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"ஈரான் குடியரசுக்கும், சவுதி அரேபியாவிற்கும் இடையிலான உறவு இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என்பது எங்கள் நம்பிக்கை," என்று வியாழக்கிழமை நடந்த சந்திப்பில் கமேனி கூறியதாக ஈரானிய அரசு ஊடகங்கள் மேற்கோள் காட்டின.

இளவரசர் காலித் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனையும், ஈரானின் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதி முகமது பகேரியையும் சந்தித்தார்.

"பெய்ஜிங் ஒப்பந்தத்திற்குப் பிறகு சவுதி மற்றும் ஈரானிய ஆயுதப்படைகளுக்கு இடையிலான உறவுகள் மேம்பட்டு வருகின்றன" என்று கூட்டத்திற்குப் பிறகு பகேரி கூறியதாக ஈரானிய அரசு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சவுதி அரேபியா அமெரிக்காவுடனான ஈரானின் அணுசக்தி பேச்சுவார்த்தைகளை வரவேற்றுள்ளது, பிராந்திய மற்றும் சர்வதேச மோதல்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறியுள்ளது.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 APRIL 18 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பயங்கரவாத தடுப்பு சட்டம் விரைவில் நீக்கப்படுமா?

நாட்டில் நீண்ட காலமாக அமுலில் இருந்து வரும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. சிரேஷ்ட சட்டத்தரணி பிரியன்ஸஸ் குலரத்ன தலைமையில் இதுகுறித்து சிபாரிசுகளை முன்வைப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்று ஆறு மாதங்கள் தாமதித்தேனும் இவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டமையானது பாராட்டுக்குரியது. நீண்ட காலத்துக்குபிறகுபயங்கரவாததடுப்புச்சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்ட இலியாவுதீன் என்ற இளைஞர் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளார். ருஸ்தியின் கைதினை நாட்டின் பெரும்பான்மையினர் இன மத கட்சி பேதமின்றி எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த கைதானது சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அவதானத்திற்குள்ளானதை அடுத்து ருஸ்தியை விடுவிக்க வேண்டிய கடப்பாட்டுக்கு பாதுகாப்பு படையினர் தள்ளப்பட்டனர். ருஸ்தியின் கைதினைஅடுத்துபயங்கரவாததடுப்புசட்டத்தைதொடர்ந்துபயன்படுத்தி கைதுகளை மேற்கொள்வதானது கேள்விக்குள்ளாக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தி அளித்துள்ள வாக்குறுதிகளில் ஒன்று கொடூரமான பயங்கரவாத சட்டத்தினை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கி விடுவதாகும்.

ருஸ்தியின் கைதினை அடுத்து இச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் இச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் உரத்த குரலில் குரல் கொடுக்க தொடங்கியுள்ளன. பலஸ்தீனின் சுதந்திரத்துக்காக தேசிய மக்கள் சக்தி தொடராக குரல் கொடுத்து வந்தது. ருஸ்தியின் கைதினை அடுத்து அரசு தனது கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. ருஸ்தி தவறு இழைத்திருந்தால் சாதாரண சட்டத்தின் மூலம் அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்திருக்க முடியும். பலஸ்தீனில் இஸ்ரேலியர்களின் அட்டகாசங்களை பார்த்து பொறுக்க முடியாமலேயே ருஸ்தி என்ற 22 வயது இளைஞன் இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டியுள்ளார். இது தவிர இந்த இளைஞர் பாதகமான குற்றங்களை புரிந்ததாக பாதுகாப்பு தரப்பினர் நீதிமன்றத்தில் கூட தெரிவிக்கவில்லை.

இந்த நிலையிலே நாடளாவிய ரீதியில் போலிசாரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து வரும் தேசிய மக்கள் சக்தி அரசானது தனது கொள்கையில் மாற்றத்தை அமுல்படுத்த முற்படுகின்றதா என்ற கேள்வியும் கூட எழுப்பப்படுகின்றது. அரசின் இச்செயற்பாடாறது பலஸ்தீனத்துக்காக குரல் கொடுப்பவர்களை அடக்கி ஒடுக்குவதற்காக அரசாங்கம் தயாராகி வருகின்றதா என்ற கேள்வியை எதிர்க்கட்சி தரப்பிலும் எழுப்ப இடமளித்துள்ளது. சில அதிகாரிகள் அரசை தவறான வழியில் இட்டுச் செல்ல முற்படுகின்றார்களா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியும் அரசாங்கமும் பலஸ்தீன் பற்றிய தனது கொள்கைகளை பற்றி தனது விளக்கங்களை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பது அவசியமாகும். யுத்த காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் நலனுக்காகவே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது. இனியும் இந்த அரசு சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அக்கறை காட்டக் கூடாது. பயங்கரவாத தடை சட்டத்தை அநியாயமாக எவர் மீதும் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

சிரேஷ்ட சட்டத்தரணி தலைமையிலான குழு சகல தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கி பொருத்தமான சட்டத்தினை அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டும். கடந்த காலங்களில் சிறுபான்மை சமூகங்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் மூலம் பாதிப்புகளை எதிர் நோக்கினார்கள். இந்த நிலை தொடர்வதற்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது. புதிய சட்ட தயாரிப்பாளர்கள் இதில் விஷேட கவனம் செலுத்த வேண்டும்.




## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்காக கூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் நேற்று (17) நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை, தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் வந்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்ய ஆணைக்குழு 21 ஆம் திகதி கூட உள்ளது.



## குறுகிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுகையில்,

கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் ஈஸ்டர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து மனித இதயத்தில் உள்ள இருளை அகற்றி, புதிய நம்பிக்கையை வழங்கி, மனித வாழ்க்கையை மாற்றும் திறனை வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகக் கருதலாம். ஆனால், 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட அந்த மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் நமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர். இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சில அரசியல் கட்சிகளின் கீழும், தற்போதைய அரசாங்கத்தின் கீழும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க முடியாததால், 6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கைகால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் இவர்கள் இழந்த நீதியை வழங்குவதாக அரசியல் மேடைகளில் சத்தமிட்டாலும், அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்க விரும்பவில்லை என்பது இன்றும் தெளிவான உண்மையாகும்.

எனவே, வீண் பேச்சுக்களையும், பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நீதி கிடைக்க அனைவரும் செயல்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களையும், பிற்போக்குத்தனமான போக்குகளையும் கடந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாடாக நல்ல எதிர்காலப் பயணத்திற்காக அணிதிரள வேண்டும் என இறுதியாக அனைவரிடமும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

## தலிபான்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தின் வேண்டுகோளின் பேரில் நீதிமன்றத்தின் முடிவு எடுக்கப்பட்டது.

ரஷ்யா 2003ஆம் ஆண்டு தாலிபான்களை தடை செய்தது, அதை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருந்தது.

இந்நிலையிலேயே, ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சி மீதான தடையை ரஷ்ய உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது.

அதே நேரத்தில், இந்தப் பிராந்தியத்தில் ஒரு பெரிய சக்தியாக மாற முயற்சிக்கும் ரஷ்யா, பல்வேறு நிகழ்வுகளுக்கு தாலிபான் பிரதிநிதிகளை மீண்டும் மீண்டும் அழைத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தில் தாலிபான்கள் பங்கேற்றனர்.

பெண்களின் சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகள் மீதான ஒடுக்குமுறைக்காக கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்ட தாலிபானுக்கு ரஷ்ய நடவடிக்கை ஒரு பெரிய அரசியல் வெற்றியாகும்.

2021 ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்பட்டதிலிருந்து ஆப்கானிஸ்தானுடனான உறவுகளை வலுப்படுத்த ரஷ்யா நடவடிக்கை எடுத்து வருகிறது.

தலைநகரான காபூலில் ஒரு இராஜதந்திர பிரசன்னத்தைக் கொண்ட நாடாகவும் ரஷ்யா உள்ளது.

*வாசகர்களே!*

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை எமது மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**







# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

**அல்லாஹ்வின அன்பை அடைய**

அல்லாஹ்வுக்கும். (அவனுடைய) தூதருக்கும் அதனால் நீங்கள் (அல்லாவற்றான்) அமன்பை அடையலாம் கழ்படிந்து நடஙகள். (3:132)

**சுவர்க்கத்தின் விவசாயம்**

உங்களில் இறைவனின் மன்லிப்புக்கும் சுவர்க்கத்துக்கும் விரைந்து செல்லுங்கள் அதன் விசாலம் வானாங்கள், பூமியின் விசாலத்தைப் போன்றது. உடையவர்களுக்காகவே தயார்படுத்தப்பட்டுள்ளது. (3.133)

**செல்வ நிலையிலும் வறுமை நிலையிலும்**

அவர்கள் (எத்தகையவர்கள் என்றால்) செல்வ நிலைமையிலும் வறுமை நிலைமையிலும் தாமை செய்து கொண்டே இருப்பார்கள் கோபத்தை ஊழுங்கி ஊடுவார்கள் மனிதர்களின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள் அல்லாஹ் (இத்தகைய) அழகிய குணமுடையவர்களை நேசிக்கின்றான். (3:134)

**மானக்கேடான காரியம்**

அன்றி,அவர்கள் யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்து விட்டாசலும் அல்லது தங்களுக்குத தாங்களே தீஙகிழைத்துக் கொண்டாலும் உடனே அல்லாஹ்வை நினைத்து (அவனிடமே) தங்களுடைய பாவ மன்னிப்பைத் தேடுவார்கள் (அல்லாஹ்வும் அவர்களை மன்னித்து விடுவான்) அல்லாஹ்வையன்றி ( இத்தகையவர்களின்) குற்றங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் செய்த (தவறான) காரியத்தை (தவறென்று) அவர்கள் அறிந்து கொண்டால் அதில் நிலைத்திருக்கவும் மாட்டார்கள் (உடனே அதில் இருந்து விலகி விடுவார்கள். (3:135)

**நன்மை செய்தவர்களின் கூலி**

இத்தகையவர்களுக்கு மரதிபவன். அவர்கள் இறைவனுடைய மன்னி ப்பும். நீறருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் எவனபதிகளும் ஆகும். அவர்கள் அங்கு என்றென்றும் தங்கிவிடுவார்கள். நன்மை செய்தவர்களின் கூலியும் நன்றே!
(18:136)

**தைரியத்தை இழந்து கவலைப்படல்**

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் தைரியத்தை இழந்து விட வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் நீங்கள் தான் மேன்மை அடைவீர்கள் (3:134)

**கஷ்ட காலம் மாறி மாறி**

ஏனென்றால் உங்களில் உண்மையாகவே நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் யாரென்று அல்லாஹ் அறிவித்து விடுவதற்காகவும் உங்களில் (மார்க்கத்திற்காக உயிரை அர்ப்பணம் செய்யும்) மாபெரும் தியாகியை அவன் எடுத்தறிவிப்பதற்காகவுமே (இவ்வாறு செய்கின்றான்) அநியாயக் காரர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை. (3:140)

**பரிசோதித்து அறிவதற்கு முன்**

(நம்மிக்கையாளர்களே!) உங்களில் (அல்லாஹ்வுக்காக) போர் புரிபவர்கள் யார்? (கஷ்டங்களைப் பொறுமையுடன்) சகித்துக் கொள்பவர்கள் யார் என்பதை அல்லாஹ் (பரிசோதித்து) அறிவதற்கு முன்னதாகவே நீங்கள் சுவர்க்கம் நுழைந்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா? (3142)

**இவ்வுலகில் மட்டும் நன்மை மறு உலகிலும் நன்மை**

யாதொரு ஆத்மாவும் அல்லாஹ்வின் அனுமதியின்றி இறப்பதில்லை இது தவணை நிர்ணயிக்கப்பட்ட விதியாகும். எவர் (தன் செயலுக்கு) இந்த உலகத்தின் நன்மையை (மட்டும்) விரும்புகின்றோமோ அவருக்கு அதனை மட்டும் அளிப்போம். எவர் மறுமை நன்மையையும் விரும்புகின்றாரோ அவருக்கு அதனையும் வழங்குவோம். மேலும், நன்றி செலுத்துபவர்களுக்கு நாம் அதிசீக்கிரத்தில் நற்பயனை வழங்குவோம். (3:145)




தேர்தல் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு: 070 239 7210



பேருவளை பீ.எம் முக்தார்

# தூய்மையான மக்கள் பணிக்கு எம்மை அர்ப்பணிப்போம்

## பேருவளை சுயேட்சை அணித் தலைவர் அஸாம் பளீல்

**பேருவளையில் நீண்ட அரசியல் வரலாற்றோடு, சமூக சேவைகளிலும் பரம்பரை பரம்பரையாக தம்மை அர்ப்பணிப்புச் செய்து கொண்டிருக்கும், மர்ஹூம் பளீல் ஹாஜியாரின் புதல்வரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ஹாஜியாரின் இளைய சகோதரருமான அஸாம் பளீல் நடைபெறவிருக்கும் பேருவளை நகர சபைக்கான தேர்தலில் சுயேச்சை அணியின் முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ளார். அவரைப் பற்றிய அறிமுகத்துக்காக இடம்பெற்ற நேர்காணல் வருமாறு**

**வினா: எமது வாசகர்களுக்காக உங்களைப் பற்றிய சிறு அறிமு-கம் ஒன்றைத் தாருங்கள்?**

**அஸாம்:** எனது சங்கிலித் தொடரான அரசியல் பரம்பரை குறித்து பேருவளை தொகுதி மட்டுமல்ல, முழு நாடுமே நன்கறியும்,சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக எனது தந்தை பளீல் ஹாஜியார் என்ற ஆளுமை, பேருவளை நகர சபைய-லிருந்து ஆரம்பித்த அரசியல் சமூக சேவைப் பயணம் மாகாண சபை, மற்றும் எனது மூத்த சகோதரரான மர்ஜான் பளீல் கடந்த பாராளுமன்றத்தில் அங்கத்தவராக அமர்ந்து ஆற்றிய பங்களிப்பு பற்றியும் பலரும் அறிவர். அத்துடன் எமது மூன்றாவது இளைய தலைமுறையான எனது சகோதரியின் புதல்வர் மிள்பர் கபூர் பேருவளை நகர பிதாவாக பதவி வகித்து, பிரதேசத்திற்கு ஆற்றியுள்ள மகத்தான சேவைகள் இன்றும் நினைவு கூறப்படுகின்றன. அந்த வரிசையிலேதான், நான் இந்த ஊராட்சி மன்றத் தேர்தலில், மோட்டார் சைக்கிள் சின்னத்தில் சுயேச்சை அணி குழுவுக்கு தலைமை தாங்கி களமிறங்கியுள்ளேன்.

**வினா: நீங்கள் சுயேச்சை அணியில் போட்டியிட முன் வந்தமைக்கான காரணம் என்ன?**

**அஸாம்:** எனது தந்தை முதல் எனது குடும்பமே எந்தத் தேர்தலிலும் சுயேச்சையாக தேர்தலில் குதித்து போட்டியிட்டே வெற்றி பெற்ற வரலாறே உண்டு. அந்த வகையிலேதான் நானும் இந்த தேர்தலில் சுயேச்சை அணியைத் தேர்ந்தெடுத்தேன்.

**வினா: இந்த முறை உங்கள் சுயேச்சை அணி வெற்றி பெறும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?**

**அஸாம்:** பேருவளையில் பளீல் ஹாஜியார் பரம்பரை என்றால் அரசியல் வானில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் குடும்பம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது. பிரதேசத்துக்கு மட்டுமல்ல, நாட்டின் பரவலான சேவைக்கு பெயர் போன குடும்பம் என்பதை பலரும் அறிவார்கள். எமது பிரதேசத்தில் இன, மத பேதமின்றி பணிகள் பல புரிந்துள்ள பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம். இதனால் எனது வட்டாரத்தில் மட்டுமல்ல, நகர சபையின் 9 வட்டாரங்களிலுமுள்ள வாக்காளப் பெருமக்களின் பெரும்பான்மையான வாக்குகள் எமது சுயேச்சை அணிக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

**வினா: வெற்றிக்காக நீங்கள் பலம் வாய்ந்த அணியொன்றை அமர்த்தியிருப்பதாக உங்கள் ஆதரவாளர்கள் கூறுகிறார்களே?**

**அஸாம்:** ஆம், உண்மைதான். சமூக நலன்களில் அக்கறையும், பிரதேசத்தின் எழுச்சியில் பங்காற்ற வேண்டும் என்ற திட்ட உறுதியும் கொண்டுள்ள வேட்பாளர்களையே எனது அணியில் ஒன்பது வட்டாரங்களிலும் அமர்த்தியுள்ளோம். எனது மூத்த சகோதரன் மர்ஜான் பளீல் ஹாஜியாரின் புதல்வர்களில் ஒருவரான இஷாக் மர்ஜானும் ஒரு வட்டாரத்தில் போட்டியிடுகிறார். நாம் தேர்தலுக்கு வருவதற்கு முன்னரே சேவைகளில் இறங்கியுள்ளதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். எமது பரம்பரை புரிந்துள்ள சேவைகளே எமது வெற்றிக்கான ஆதரவைத் திரட்டித்தரும் என்பதில் சந்தேகமே இல்லை.

**வினா: ஊழல், மோசடியற்ற அரசியல் என்ற கோசம், பிறிதொரு கட்சியால் முன்வைக்கப்படும் நிலையில் அது உங்களுக்கு சவாலாக அமையுமா?**

**அஸாம்:** ஊழல், மோசடி இல்லாமல் அரசியல் செய்வதே எமது குடும்பத்தின் பண்பாகும். இந்த கோஷம் இப்போது தான் தலை தூக்கியுள்ளது. ஆனால் இற்றைக்கு 40-50 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எமது குடும்ப பரம்பரை தூய்மையான அரசியலை செய்து காட்டியுள்ளது. நாம் சொந்த பணத்திலிருந்து மக்கள் சேவையில் ஈடுபடுகிறவர்களே அன்றி மக்கள் பணத்தை சுரண்டி பிழைக்கும் அரசியல்வாதிகள் அல்லர், பணம் சுருட்டுவதற்காக அரசியலுக்கு வருபவர்களுமல்லர். இது எமது மக்களுக்குத் தெரியும்.



**வினா: நீங்கள் வெற்றி பெற்றால் எந்தடிப்படையில் சேவைகளை முன்னெடுப்பீர்கள்?**

**அஸாம்:** எனது குடும்பம் நல்ல அரசியல் தேர்ச்சியும், அனுபவமும் மிகைத்த பரம்பரை. குறிப்பாக எனது மூத்த சகோதரன் மர்ஜான் பளீல், முன்னாள் நகர பிதா எனது மருமகன் மிள்பர் கபூர் ஆகியோர்களது அனுபவ ஆலோசனைகளைப் பெற்று எமது மக்கள் எதிர்பார்ப்பை விடவும் அளப்பரிய தொண்டாற்ற எங்களால் முடியும். இத்தகைய வழிகாட்டல்கள் வேறு எந்த அணிகளுக்கும் இல்லை.

**வினா: உங்கள் அணி வெற்றி பெற்றால் நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் எத்தகைய பணிகளை செய்வதற்கு உத்தேசித்துள்ளீர்கள்?**

**அஸாம்:** எமது நகரை “கிளீன் பேருவளை” யாக்குவதே எமது உத்தேசமாகும். இன்று எமது பகுதியை சீரழித்துக் கொண்டிருப்பது குப்பை கூழப் பிரச்சினையாகும். பெரு வீதி, குறுக்கு வீதி என்று பாராமல் காணும் இடமெல்லாம் குப்பை மேடுகளே நகரை நகரமாக்கிக் கொண்டிருக்கின்றன. எமது முதல் பணியாக இதற்கு முடிவு கட்டி விடிவொன்றைக் காண வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே, இந்த விடயத்தில் தேர்ச்சி பெற்ற குழுவொன்றை அமர்த்தி குப்பைகளை முகாமைத்துவப் படுத்தி அதன் மூலமும் நகர சபைக்கு வருமானம் கிடைக்கும் முறைமையொன்றை ஏற்படுத்த முயலுவேன். இதன் மூலம் ஒரே கல்லில் இரு பழங்களை வீழ்த்துவதை சமயோசிதமாக செய்வதே எனது திட்டமாகும். வத்திமபுர உள்ளிட்ட பல தாழ்நிலப் பகுதிகள் மழைக் காலத்தில் நீருள் முழ்குகின்றன. இதனால் நோய்கள் மக்களைத் தொற்றி படாத பாடு படுத்துவதற்கும் ஒரு தீர்வு பெற வேண்டும். வெள்ளப் பெருக்கால் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை அகற்ற சிறந்த வடிகான் திருத்த பணிகளையும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மூலம் நிறைவேற்றி இதற்கும் நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதும் எனது திட்டத்தின் அடுத்த படி முறையாகும். இவ்வாறு நகரத்தை முதற் கட்டமாக கிளீன் - சுத்தப்படுத்திய கையோடு எமது பிரதேச கல்வித்துறையில் கண் வைப்பது மட்டுமல்ல, கை வைத்து காரியமாற்றுவேன். நகர சபை மட்டத்திலான உயர்ந்தபட்ச பணிகளை கல்வித்துறை மேம்பாட்டுக்காக செய்து புத்திஜீவிகள் பல்கிப் பெருக வழி சமைப்பேன். அத்துடன் சுகாதார வைத்தியதுறைக்கும் நகர சபையால் ஆன செயற்திட்டங்களை செய்வேன். மேற்படி, பல்துறை பணிகளுக்கும், வெறிநாட்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகளையும் சம்பந்தப்பட்டோரை நாடி செய்து முடிப்பேன். இதற்கான வழிமுறைகளை எனது குடும்ப முன்னோடிகளின் ஆலோசனைகளைப் பெற்று செயற்படுத்தக்கூடிய துணிவுள்ள செயற்திட்டங்களிலும் ஈடுபடுவோம். மக்கள் நலனே எமது பணியாகும்.

கல்வி, சுகாதாரம், விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்கும் நகர சபை சக்திக்குட்பட்ட விதத்தில் எமது பங்களிப்பைச் செய்வோம். இவை எமது ஊர் முன்னேற்றத்திற்கு இன்றியமையா பொக்கிஷனங்களாகும். மாணிக்க வியாபாரத்தை அபிவிருத்தி செய்வது போல, மக்கள் வாழ்வின் உயர்வுக்கு முன்நிற்கும் பொருளாதார அபிவிருத்திக்கு கை கொடுக்கும் வகையில், இப் பிரதேசத்தின் பிரதான பொருளீட்டும் உபாயமான மீன்பிடி, உல்லாசப் பயணத்துறையின் மேம்பாட்டுக்கும் எங்களால் இயன்ற பணிகளை மேற்கொள்ள உள்ளோம்.

மீன்பிடித் துறையில், ஈடுபடுவோர் பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுத்து வருவதும் எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. வள்ளங்கள், மீன்பிடி வலைகளின் தேவைகள், என்று பட்டியலிடலாம்.

இக்குறைபாடுகளை ஆராய்ந்து தேவைகளை ஈடு செய்து கொடுக்கவும் எமது நகர சபை வருமானத்தைப் பயன்படுத்துவதோடு, மேலதிக தேவைகளுக்காக எமது மத்திய அரசின் உதவிகளைப் பெற்று நிறைவேற்றவும் எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் உறுதியளிக்கிறேன்.

எங்கள் பிரதேசத்தை வாட்டிக் கொண்டிருக்கும் பிரதான பிரச்சினை குப்பைகள் அகற்ற சிறந்த முகாமைத்துவம் இல்லாமை என்பதாகும். நகர சபை எம்மை வந்தடையும் பட்சத்தில் நல்ல நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து இதற்கும் தீர்வொன்றைப் பெற்றுக் கொணுப்பதும் எமது பொறுப்பாகக் கொள்வேன்.

வளர்ந்து வரும் எமது மாணவர் சமூகத்தையும், இளம் வாலிபர் சமூகத்தையும் தவறான திசையில் செல்லாது காப்பாற்றும் பொறுப்பும் எமது பிரதேச தலைவர்களிடமே தங்கியுள்ளது. இதிலும் நகர சபை தலைமை என்ற வகையில் நாமும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. இதிலும் எமது பங்களிப்பும் மிகவும் அவசியப்படுகிறது.

இளைஞர் பொழுது போக்காகவும், உடல் நல உடற்பயிற்சிக்காகவும், லிளையாட்டு மைதான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் எமது திட்டங்களில் உள்ளதையும் நினைவூட்டுகிறேன். சனசமூக நிலையம், வாசிகசாலை ஒன்றின் தேவையும் நிலவுகிறது. எமதூ இளைய தலைமுறை தவறான பாதையில் பயணிக்காது தடுக்கும் சாதனங்கள் இவை. இவற்றையும் நகர சபை நிருவாகத்தால் உருவாக்கிகா கொடுக்க இயலும். மேலும் சிறுவர் பூங்கா, நவீனமயப்படுத்தப்பட்ட பாலர் பாடசாலைகள் என்றெல்லாம் எமது நகரின் உயர்வுக்கும், முன்னேற்றத்திற்கும் உந்து சக்திகளாகும். பேருவளை நகர சபையின் வேலைத்திட்டங்களிலும் இவை கருத்திற் கொண்டு செயற்படுத்தப்படும் போது எமது நகரம் ஒரு முன்மாதிரி மிக்க பிரதேசமாக திகழும் காலம் வெகுதூரத்தில் இருக்காது.




# சீனன்கோட்டையை சிறப்பு மிக்க கோட்டையாக மாற்றுவேன்

## இளம் வர்த்தகர் அஷ்பான் அஹ்ஸன்

பேருவளை பீ. எம். முக்தார்

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள பேருவளை நகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக சீனன் கோட்டை வட்டாரத்திற்கான வேட்பாளராக இளம் இரத்தினக்கல் வர்த்தகர் அஷ்பான் அஹ்ஸன் களமிறங்கியுள்ளார். 'ரெஜிஸ்டார் ஸாலி' என இப்பகுதி மக்களால் அழைக்கப்பட்ட முன்னாள் முஸ்லிம் விவாகப் பதிவாளர் மர்ஹூம் சாலி, சீனங்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலின் சுமார் 54 வருடங்கள் கதீபாக கடமையாற்றியவருமான மர்ஹூம் அபுசாலி ஆலிம் (ரஹ்) அவர்களின் பேரனும் அஹ்ஸன் பாத்திமா ரிஸானா தம்பதியின் சுரேஷ்ட புதல்வருமாவார்.
சீனன் கோட்டையில் சர்வதேசம் வரையில் புகழ்பெற்று விளங்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக கேந்திர நிலையம் அமையப் பெற்றுள்ள 'பத்த' என்னுமிடத்தில் பிறந்த இவர் அதே பகுதியில் புகழ் பெற்று திகழும் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கற்றுத் தேர்ந்துள்ளார்.
2000 ஆம் ஆண்டிலிருந்து படிப்பை முடித்த கையோடு இரத்தினகல் வர்த்தகத்தில் கால் பதித்துள்ளார். கிரிக்கெட் , உதைபந்தாட்டம் உள்ளிட்ட விளையாட்டு துறை பிரியரான இவர் இரத்தினக்கல் வர்த்தகத்தோடு சமூக சேவைகளிலும் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். இதுவே இவரை அரசியலிலும் கால் பதிக்க கால் கோளாகியதாக, தேர்தலில் போட்டியிட முன்வந்தமைக்கான காரணம் குறித்து விணவிய போது குறிப்பிட்டார் .
இது விடயமாக அவர் மேலும் கூறியதாவது,
எமது சீனன் கோட்டை பிரதேசம் உலக பிரசித்தி பெற்ற ஊராகும். உலக நாடுகள் பலவற்றின் முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் தம் வர்த்தக நடவடிக்கைகளுக்காக சீனன் கோட்டையின் பிரதான குறுக்கு வீதிகளில் அன்றாடம் நடமாடுவதை காண்கின்றோம்.
இந்த நிலையில் எமது சீர்படுத்தப்படாத வீதிகளின் அவலட்சனம், வடிகான்களின் இலட்சனம் ,இவற்றை தாண்டி குப்பைகள் அப்புறப்படுத்துவதிலும் அலட்சியம் போன்ற குறைபாடுகள் என்னை உருத்தவே செய்தன.
எனது இந்த மனக்குறையை எமது பகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரும் பிரதேசத்தின் சிரேஷ்ட அரசியல்வாதியுமான கௌரவ இப்திகார் ஜெமீல் அவர்களிடம் முன்வைத்து வரக்கூடிய எமது புதிய நகர சபை உறுப்பினர்கள் ஊடாக எமது நகரை உன்னத நிலைக்கு மாற்றி அமைக்க சீனன் கோட்டை வட்டாரத்தில் இம்முறை போட்டியிட வாய்ப்புபோன்றைத் தருமாறு கேட்டேன்.
எனது செயற்பாடுகள் ஆற்றல்கள் குறித்து நன்கு அறிந்த அவர் எனது கோரிக்கையை ஏற்று எனக்கு நல்ல ஆலோசனைகளும் அறிகுறிகளும் தந்து வேட்பாளராக என்னை அமர்த்தினார் எனவே இந்த வட்டாரத்தில் நான் அமோக



வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவது உறுதி அதன் பின்னர் எமது முன்னோடி இப்திகார் ஜெமில் அவர்களின் வழிகாட்டியோடும் ஆலோசனைகளைப் பெற்றும் இன்ஷா அல்லாஹ் எமது ஊருக்கான பணிகளை தொடர்வேன். சீனன் கோட்டையை மேலும் சிறப்புமிக்க உன்னத கோட்டையாக்கும் எமது கனவை நினைவாக்கிக் காட்டுவேன்.
மேலும் அவர் தொடர்ந்து கூறுகையில், இந்த வட்டாரத்தில் எனது வெற்றிக்கு உறுதுணையாக மற்றொரு சமூக நலன் விரும்பியான ரிமாஸ் ரிழ்வான் என்ற இளம் ஆளுமை ஒருவரையும் போனஸ் உறுப்பினராக அமர்த்தியுள்ளார். அவரையும் கருத்தில் கொண்டு எமது வட்டார வாக்காளர் பெருமக்கள் அணி திரண்டு தொலைபேசி சின்னத்துக்கு புள்ளியிட வேண்டும்.
எமது கட்சிக்கு வாக்குகள் குவியும் போது வட்டாரத்தில் நான் வெற்றி பெறுவதோடு போனஸ் பட்டியலில் உள்ளவர்களும் உள்வாங்கப்படுவது உறுதி.
நாம் இருவரும் எமது நகர் சபையின் பிரதிநிதித்துவம் பெற்று எங்களது சேவைகளைப் பெற்றுக் கொள்வது எமது வாக்காளர்கள் அளிக்கும் வாக்குகளே தீர்மானிக்கப் போகின்றன.
எனவே தொலைபேசி சின்னத்தை மறவாதீர்கள். கடந்த தேர்தலில் எமது சமூகத்தில் பலர் என்.பி.பியை ஆதரித்து இப்போது கண்ட பலன் ஒன்றுமில்லை.
அவர்களும் முஸ்லிம்களை செல்லாக் காசாக்கி பார்க்கிறார்கள்.
இந்தத் தேர்தலிலும் அவர்களை விரட்டியடிப்போம். இரவில் விழுந்த கிணற்றில் பகலிலும் விழக் கூடாது.
அதேபோன்று முஸ்லிம்களின் பல வழிகளிலும் வஞ்சம் தீர்த்த ராஜபக்சாக்களின் அணி இப்போது மாறுவேடம் பூண்டு மோட்டார் சைக்கிள் சின்னத்தில் வாக்குக் கேட்டு வருகிறார்கள் குற்றுயிரக்கக் கிடக்கும் அவர்களுக்கும் ஒட்சிசன் கொடுக்க வேண்டாம் என எமது வாக்காளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## ஊடகவியலாளர்களுக்கான இலவச கையேடு

அறிவியலோடு தொடர்புடைய விடயதானங்களைப் பொது மக்களுக்கு இலகுவான, எளிய நடையில் அறிவூட்டப் பயன்படும் நிபுணர்கள், விஞ்ஞானிகள், மற்றும் வளவாளர்களின் தொடர்புகளை உள்ளடக்கிய டிை கையேடொன்றை இலங்கை விஞ்ஞான மன்றம் வெளியிட்டுள்ளது.
கடந்த வாரம் இலங்கை மன்றக் கல்லூரியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தலைமையில் நடைபெற்ற விஞ்ஞானபூர்வமான முறையில் நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் ஊடக அறிக்கையிடல் தொடர்பான கரத்தரங்கின் போது இக் கை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.
உணவும் போஷாக்கும்,திறன் மற்றும் சக்தி, விவசாயம்,மிருக வளர்ப்பு, சுகாதாரம், பாரம்பரிய வைத்தியம், கைத்தொழில், அடிப்படை விஞ்ஞானம், தொல்லியல், புள்ளி விபரம், சமூகப் பாதுகாப்பு , தேசிய பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், முதலான விடயதானங்களில் துறைசார் நிபுணர்களின் விபரங்கள் இக் கையேட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
மேற்குறிப்பிடப்பட்ட துறைசார் தகவல் தரவுகள் புதுக் கண்டுபிடிப்புகள், சமகால மாற்றங்கள் என்பவற்றை மக்களுக்கு சென்றடைய வழி செய்வதே இத் தொகுப்பின் பிரதான நோக்கமென கலாநிதி சேபாலி சுதசிங்க உதயத்துக்குத் தெரிவித்தார்.



# பேருவளை நகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும்

## முன்னாள் நகர பிதா மஸாஹிம் முஹம்மத்

( பீ.எம் முக்தார்)

பேருவளை நகர சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என மருதானை வட்டார வேட்பாளர் முன்னால் நகர பிதா மஸாஹிம் முஹம்மத் கூறினார்.

பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் முழு நாட்டு மக்களையும் ஏமாற்றி தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. போலியான வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். மக்கள் இதற்கு ஏமாந்தார்கள். இன்று என்ன செய்வது என்பது பற்றி சிந்திக்கின்றனர்.



நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி படுதோல்வியை தழுவும். நாட்டு மக்கள் இவர்களுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள்.

பேருவளை நகர சபையை தேசிய மக்கள் சக்தியாலோ அல்லது சுயேற்சை அணியாலோ வெற்றி கொள்ள முடியாது. இவர்களின் போலி வாக்குறுதிகளை மீண்டும் மக்கள் நம்பத் தயாரில்லை. எந்தவித அரசியல் அனுபவமும் இல்லாதவர்களே இந்த இரு அணிகளிலும் போட்டியிடு கின்றனர். இவர்கள் எவ்வாறு நகர சபையை நிர்வகிக்கப் போகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்றவர்கள் சிறந்தொரு குழுவினராகும். இதனால் மக்கள் ஆதரவு மேலும் பெருகியுள்ளது.

முழு நாட்டு மக்களினதும் ஆணை தேசிய மக்கள் சக்திக்கே என்று சொல்கின்றவர்களுக்கு இத்தேர்தலில் மக்கள் சரியான செய்தியை சொல்லி நல்ல பாடம் புகட்டுவார்கள்.

பேருவளை நகர சபைக்கு சக்தியுள்ள, தைரியமான எல்லா சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவர்கலே தேவை. மக்கள் இம்முறை தேர்தலில் இவ்வாறான அரசியல் அனுபவமும், தைரியமும் கொண்ட குழுவையே தெரிவு செய்ய வேண்டும். அந்த தகுதி ஐக்கிய மக்கள் சக்தி குழுவிடமே உள்ளது எனத் தெரிவித்தார்.

# காதி நீதவான் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(உக்குவல நிருபர் )

நீதிச்சேவை ஆணைக்குழு வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் பிரதேசங்களுக்குப் புதிதாக தகுதியுள்ளவர்களிடமிருந்து காதிநீதவான் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பேருவல, உடதலவின்ன ( உட , மெத , பஹத்த தும்புற ), யாழ்ப்பாணம், கொழும்பு தெற்கு, புத்தளம் - சிலாபம், காத்தான்குடி, சம்மாந்துரை, மாத்தளை, மாவனெல்ல, போன்ற இடங்களில் வெற்றிடம் நிலவுகிறது.

காதிநீதவான் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 7500, உதவித்தொகையாக மற்றும் உதவியாளர் சேவை , அஞ்சல் மற்றும் எழுதுகருவிகளுக்கான செலவுத் தொகையாக ரூபா 6250 வுடன் மொத்தமாக ரூபா 13750 கொடுப்பனவாக வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்த மேலதிக தகவலுக்காகவும் விண்ணப்பிக்கும் முறை பற்றிய விபரங்களுக்கும் கடந்த மார்ச் 28ந் திகதிய வர்த்தமாணியைப் பார்வையிடலாம் விண்ணப்ப இறுதி திகதி இம்மாதம் 30 ந் திகதியாகும்.




# ஜே.எம்.மீடியா நிறுவனத்தின் இலவச ஊடக செயலமர்வு

(பாரா தாஹீர்)

ஜே.எம்.மீடியா நிறுவனம் பத்தாவது வருடமாகவும் அகில இலங்கை ரீதியில் ஏற்பாடு செய்துள்ள இலவச ஊடக செயலமர்வு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது.

பத்து வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் நிலைத்து நின்று சாதனைகள் பல படைத்துள்ள இந் நிறுவனம் பல ஊடகவியலாளர் களையும் நற்பிரஜைகளையும் உருவாக்கியுள்ளது.

இந்த இலவச ஊடக செயலமர்வு தேசிய புகழ் பெற்ற பல ஊடகவியலாளர்களால் நடாத்தப் படவுள்ளதாக ஜே. எம்.மீடியா நிறுவனத்தின் தலைவரும், ஊடகவியலாளருமான சட்டமாணி ராஷிட் மல்ஹர்தீன் தெரிவித்தார்.




ஆசிரியர்கள்,பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள்,- ஊடக அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புவர்கள் ,ஊடக ஆர்வளர்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் செய்தி இணையங்களை செயற்படுத்துகின்ற வர்கள் என 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம்.

முழுமையாக பங்கு பற்றும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலவச பதிவுகளுக்கு 0777_28348 இலக்கத் தோடு தொடர்பு கொள்ள முடியும்.

## நாயக்கர்சேனை கிராம சமூகத்தின் பாடசாலையின்

# இரு மாடி கட்டிடத் திறப்பு விழா







(எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் ( நாவுக்கரசர் வித்தியாசாலை) வித்தியாலயத்திற்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ( ஐ.எம்.எச்.ஓ) முழுமையான நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி கட்டிடத்தின் திறப்பு விழா அண்மையில் (10) பாடசாலையின் அதிபர் வீ.ராமநாதன் தலைமையில் வெகு விமர்சையாக இடம் பெற்றது.

கற்பிட்டி நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் வித்தியாலயத்தின் இந்த நிகழ்வு இந் நாயக்கர்சேனை கிராம சமூகத்தின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும் எனவும் 1960/09/30 ம் திகதி ஆரம்பிக்கப் பட்ட நாவுக்கரசர் வித்தியாலயம் வரலாற்றை பரைசாற்றும் முகமாக இந்த அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இரண்டு மாடி கட்டிடத்தின் அடிக்கல் 2024/09/30 ம் திகதி நாட்டப்பட்டதும் சிறப்புக்கள் நிறைந்து எனவும் பாடசாலையின் அதிபர் வீ.ராமநாதன் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

நாயக்கர்சேனை மக்களின் வரலாற்று நிகழ்வாக இடம்பெற்ற பாடசாலை கருமாரி கட்டிடத் திறப்பு விழாவின் பிரதம அதிதிகளாக புத்தளம் வலயக் கல்வி பணிமணையின் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம் அனீஸ் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதி கல்வி பணிப்பாளர் என்.எம். ஆர் தீப்தி பெர்ணான்டோ கௌரவ அதிதிகளாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினர் வைத்தியர் எஸ் தேவேந்திரன் மற்றும் ஐ.எம்.எச்.ஓ. அமைப்பின் தலைவர் ராஜம் தேவேந்திரன் சிறப்பு அதிதிகளாக மாகோ கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் எஸ்.எச் றிஸ்வி, புத்தளம் வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். கமலேந்திரன், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம் ஜவாத், அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கை வதிவிடம் பணிப்பாளரும் ஓய்வு பெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் எம். ராதாகிருஷ்ணன் என பலரும் கலந்து சிறப்பித்துடன் பாடசாலை சார்பாகவும் நாயக்கரசேனை சமூகம் சார்பாகவும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவர் மற்றும் ஆலோசனை சபை உறுப்பினர் ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் நினைவு பரிசிலகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதுத் திட்டங்களை வகுத்து பேருவளை நகர சபைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வோம்

## முன்னாள் உப நகர பிதா ஹஸன் பாஸி

பேருவளை பீ. எம். முக்தார்

**சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பேருவளை நகர சபையில் அங்கத்தவராகஇ உப நகர பிதாவாக, எதிரணி தலைமை பொறுப்பாளராக உயர் பதவிகளில் அமர்ந்து சமூகத்துக்கும் பிரதேசத்துக்கும் அளப்பரிய பணியாற்றிக் கொண்டிருக்கும் கனவான் அரசியல் வாதியாக திகழ்பவர் தான் ஹஸன்பாஸி ஹாஜியார். தற்போது நடைபெறவுள்ள பேருவளை நகர சபைக்கான தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராக களமிறங்கியுள்ளார். இவரைப் பற்றி மக்கள் அறிந்ததும் அறியாததுமான தகவல்களை இவர் எமக்களித்த நேர் காணலில் பகிர்ந்து கொள்கிறார். அவை வருமாறு:**

**வினா: உங்கள் வாழ்க்கை பின்னணி பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றை தாருங்கள்?**

**ஹஸன்பாஸி** : பேருவளை மககொடையைச் சேர்ந்த மர்/ஹூம் முகம்மது ஹனீபா மரிக்கார் முகம்மது பாஸி மர்ஹூமா முகம்மது ஸமீம் மரிக்கார் சித்தி மசூனா தம்பதியின் புதல்வனாக 1974ஆம் ஆண்டு பிறந்தேன். சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் பின்னர் மககொட ஐ.எல்.எம். சம்சுதீன் மகா வித்தியாலயத்தில் இணைந்து உயர்தரம் வரையிலும் கற்றுள்ளேன். பின்னர் தொழில் உழைப்புக்காக மாணிக்க வர்த்தகத்தில் கால் பதித்தேன். அத்துடன் சமூக சேவைப்பணிகளிலும் ஈடுபாடு காட்டி வந்தேன். எனது சமூகப் பணி பரவலாக செய்யவும் நண்பர்களது உந்துதலாலும் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தேன். அது இன்று வரையும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**வினா : உங்களது அரசியல் பயணம் ஆரம்பம் முதல் இன்று வரை எப்படி நகர்ந்து கொண்டிருக்கிறது?**

**ஹஸன்பாஸி :** 2002 ஆம் ஆண்டு பேருவளை நகர சபைத்தேர்தலில் அப்போதைய ஐ.தே.கட்சியின் மககொடை வட்டாரத்துக்கான வேட்பாளராக போட்டியிட்டேன் அந்த கால கட்டத்தில் நான் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா நகர் சென்றிருந்தேன். வாக்களிப்புக்கு மூன்று தினங்கள் இருக்கையிலேயே தான் ஹஜ் கடமைகளை பூர்த்தி செய்து கொண்டு நாடு திரும்பினேன். அப்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எதிலும் பரவலாக ஈடுபடாத நிலையிலேயே வெற்றி வாய்ப்பு என்னை நாடி வந்தது. இரகசியமாகவும் பரகசியமாகவும் நான் செய்த சமூக நலப்பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரமாகவே இதனை கருதலாம்.
நகர சபை பிரவேசத்துடனே நகர சபை ஊடான எனது சேவைகளும் முடக்கி விடப்பட்டன. மககொட பகுதியில் ஏழு தினங்களாக அயராத பணியாக “வீதி வாரம்” என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நானும் வீதிகளில் இறங்கி குப்பைகள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டு ஊரை சுத்தப்படுத்தி முன் மாதிரி காட்டுவதில் முன்நின்று உழைத்தேன். இந்த ஒரு வாரத்தில் உடைந்து சிதைந்து குன்றும் குழியுமாக காணப்பட்ட பல குறுக்கு வீதிகள் யாவும் செப்பனிடப்பட்டு புதுப் பொழிவு பெற்றனர். பல மாதக் கணக்காக மின் கம்பங்களில் ஒளிராது இருந்த மின் விளக்குகள் மாற்றப்பட்டு இருள் சூழ்ந்த பல வீதிகள் ஒளிமயமாக்கப்பட்டன. இவ்வாறு தொடர்ந்த எனது பணிகளால் மக்கள் ஆதரவு பெருகஇ தொடர்ந்து வந்த தேர்தல்களிலும் எனது வட்டாரத்தில் நானே வெற்றி பெற்று வந்தேன்.
2006ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எனது கட்சி நகர சபையை கைப்பற்றிய போதும் சிறு விருப்பு வாக்கு வித்தியாசத்தில் உப நகராதிபதியானேன். இதன் மூலம் முழு பேருவளை நகரத்திற்குமான எனது பணிகள் பரவலாக்கப்பட்டன.
இப் பகுதியில் உள்ள ஒரே முஸ்லிம் பாடசாலை ஐ.எல்.எம் ஷம்சுத்தீன் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் சிறந்த முறையில் புணரமைப்பு செய்து கொடுக்கப்பட்டது. அதே போன்று பாடசாலையைச் சுற்றி மதிலும் அமைத்து கொடுத்து எனது உயர்ந்த பட்ச பங்களிப்பை வழங்கியுள்ளேன்.
இன மத பேதமற்ற எனது சேவையின் வெளிப்பாடாக அயலிலுள்ள அலவகந்த சிங்கள வித்தியாலயத்துக்கான பௌதிக வளத் தேவைகளும் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டன.
அதே காலப்பகுதியில் மருதானையில் சிறு பாலம் ஒன்றும் அமைத்து கொடுக்கப்பட்டது. அத்துடன் வீதிகள் புனரமைப்பு, வடிகால் திருத்தம், சிதைந்த மதகுகள் (போக்கு) புனரமைப்பு என்று பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



அடுத்து 2011ஆம் ஆண்டு நடைபெற்ற நகர சபைக்கான தேர்தலில் எனது வட்டாரத்தில் நான் வெற்றி பெற்ற போதிலும் எனது கட்சியால் நகர சபையை வென்றெடுக்க முடியாது போனது. இந் நிலையில் சபையின் எதிரணித் தலைமைப் பொறுப்பு என்னை வந்தடைந்தது. அந்த கால கட்டங்களிலும் என்னாலான பணிகள் தொடரவே செய்தன. 2018ஆம் ஆண்டு தேர்தலிலும் எமது சபைக்கான ஒன்பது ஆசனங்களில் நான்கு வட்டாரங்களிலே தான் எனது அணி வெற்றி பெற்றது.
ஹெட்டியாகந்த வட்டாரத்தில் ஒரேயொரு வாக்கு வித்தியாசத்தில் நாம் தோல்வி கண்டு சபையைக் கைப்பற்ற முடியாது போனமை துரதிஷ்டமே! இந்த சந்தர்ப்பத்திலும் எதிர் கட்சி தலைமை என்னையே வந்தடைந்தது. இவ்வாறு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த எமதுசபைக்கான சகல தேர்தல்களிலும் நான் தொடர்ச்சியாக வெற்றி பெற்றமை எனது பணிகளை மக்கள் ஏற்றுக் கொண்டமைக்கான அங்கீகாரமென்றே கூறலாம்.
இப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் மற்றுமொரு மைல் கல்லாக கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை ஒன்றையும் மிகவும் வெற்றிகரமான நடாத்தி வருவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**வினா : நீண்ட அரசியல் வரலாறு ஒன்றையே விபரித்தீர்கள். நகர சபை மட்ட பணிகளுக்கப்பால் எமது சமூகம் எதிர் நோக்கிய சவால்கள் பல வற்றுக்கும் நீங்கள் முகம் கொடுத்துள்ளதாக பேசப்படுகிறதே!**

**ஹஸன் பாஸி :** நீங்கள் கேட்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் கூறுகிறேன். என்னை பிரபல்யப் படுத்துவதை தவிர்த்தே விடுகிறேன்.
கொவிட் 19 மரணம் எனக்கூறி ராஜபக் ஷாக்கள் முஸ்லிம் ஜனாஸாக்களை பலவந்தமாக எரித்து எமது சமூகத்தை வஞ்சம் தீர்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சபையின் அமர்களின் போது எனதும் சமூகத்தினதும் வன்மையான கண்டடத்தை துணிவுடன் வெளிக்காட்டியே வந்துள்ளேன். மேலும் எமது வாலிபர்களை அணி திரட்டி எதிர்ப்பு, ஆர்ப்பாட்டங்களையும் பரவலாக நடாத்தியுள்ளேன்.
இவற்றுக்கெல்லாம் எமது தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் அவர்கள் அனுசரணையோடு முன்னின்று உழைத்தமையும் நினைவு கூற வேண்டும்.
கொரோனா போர்வையில் எமது தொகுதி முஸ்லிம் ஊர்கள் பலவும் முடக்கப்பட்ட வேளையில் நானும் எனது சகாக்களும் வீடுகளில் முடங்கிக் கிடக்காது வீதிகளில் இறங்கி உலர் உணவு பகிர்வு உள்ளிட்ட பலதரப்பட்ட பணிகளிலும் ஈடுபட்டோம். அப்போது நிகழும் மரணங்கள், நோயாளிகள் வைத்தியசாலைக்கு போவதற்கான அனுமதிகள் பெறுவது போன்ற அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் எனது வட்டாரத்திற்கும் அப்பால் சென்று துரித நடவடிக்கைகளிலும் தொண்டாற்றினேன். இதே போன்றுதான் 2004ல் சுனாமி அனர்த்தத்தின் போதும் கை கொடுத்துள்ளேன்.
இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து பலஸ்தீனத்தை துவம்சம் செய்யும் சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது சமூகத்தின் எதிர்ப்பை பலமாக வெளிக் கொண்டு வந்து கண்டிக்கவும் நான் தவறுவதில்லை. எனது சுமார் 25 வருடகால அரசியல் வரலாற்றில் அதிகாரத்தில் இருக்கும் போதோ– இல்லாத போதோ மற்றும் எமது சமூகம் சார்ந்தோ– பிற சமூகம் சார்ந்தோ அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க ஒரு போதும் பின் நின்ற வரலாறு எனக்கில்லை.

**வினா : நகர சபை கொடுப்பனவு , தொலைபேசி கட்டணம் உள்ளிட்ட எந்த கொடுப்பனவுகளையும் பெறாது நீங்கள் அவற்றையும் சமூக நலப் பணிகளுக்கே கையளித்து வருவதாக அறிகிறேன்?**

**ஹஸன் பாஸி :** ஆம், உண்மைதான். நான் அரசியல் மூலம் பணம் உழைக்க வரவில்லை. எனது தொழில் ஊடாக கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை மக்கள் நலனுக்காக செலவு செய்யும் அரசியல்வாதியாகவே எனது கால் நூற்றாண்டு அரசியல் வாழ்க்கை அமைந்துள்ளது. எனது கரங்கள் தூய்மையானது. தூய்மையான பரிபாலனமே மக்கள் எதிர்பார்க்கும். இதற்கு இலக்கணமானவர் தான் நான். 2002 முதல் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் எனது மககொட வட்டாரம் வெற்றி பெற்று வந்துள்ளமை எனது சேவை மக்களுக்குத் தேவை என்பதையே உணர்த்துகின்றதல்லவா?

**வினா : அடுத்து வரும் ஆண்டுகளில் நீங்கள் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து சுருக்கமாக குறிப்பிடலாமா?**

**ஹஸன் பாஸி :** எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் உள்ளூராட்சிமன்றங்களுடன் எமது நகர சபையை ஒப்பிடுகையில் நாம் ஆமை வேகத்தில் குறைந்த வேகத்திலே தான் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் தற்கால யுகத்தில் போட்டி போட்டுக்கொண்டு நவீன காலத்துக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கும் போது எமது நகர, பிரதேச சபைகளோ குப்பை கூழப் பிரச்சினைகளை தலையிலே கொட்டிக் கொண்டிருப்பதை நினைக்கும் போது நாம் வெட்கித் தலை குனிய வேண்டியுள்ளது.
எனவே இந்த தேர்தல் வெற்றியோடு குப்பை பிரச்சினைக்கும் குப்பை கூறி அடுத்து வரும் காலத்தில் நவீன தொழில் நுட்ப யுகம் ஒன்றுக்குள் நுழைவதற்கான புதுப் புது திட்டங்களை வகுத்து எமது நகர சபைப் பிரதேசத்தை சுவர்க்க பரியாக்குவதை இலக்காகக் கொண்டு பணிகளை நகர்த்திச் செல்வோம்.
முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றம் நிகழ்ந்த பிரதேசம் என்ற புகழ் எங்கள் ஊருக்குண்டு. எமது சீனன் கோட்டை வட்டாரத்திற்கு பேரும் புகழும் இருந்து வருகின்றன. பத்த என்ற சிற்றூரில் சர்வதேசம் வரையும் பிரசித்தம் பெற்ற இரத்தினக்கல் ஆபரண சந்தையும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதனை மேலும் நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். எமது மக்களின் பிரதான வியாபாரமான இரத்தினக் கல் வர்த்தகத்தை மேலும் வளர்ந்து வரும் எமது இளம் தலை முறையினர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் மாணிக்க வர்த்தகத்திலிருந்து விடுபடுவதற்குரிய பயிற்சித் திட்டங்களை வழங்க வேண்டும்.
இளைஞர் யுவதிகளுக்கு சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி இப் பகுதியின் பொருளாதார நிறைவுக்கு வழி வகைகள் செய்ய வேண்டும்.
கல்வி, சுகாதாரத்துடன் மக்கள் தேகாரோக்கியமாக வாழும் வகையில் காத்திரமான செயற்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
கடற்றொழில், உல்லாசப் பயனத்துறைகள் இப் பகுதியின் பொருளாதாரத்திற்கு கை கொடுக்கும் இதர தொழிற்துறைகளாகும். இவற்றின் வளர்ச்சி, முன்னேற்றத்திலும் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
விளையாட்டு, வாசிகசாலை உள்ளிட்ட சுகாதார அறிவார்ந்த பொழுது போக்கு நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவை தொடர்பான பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
இவற்றை மையமாக கொண்டே எமது எதிர்கால பணிகள் திட்டமிடப் படுகின்றன. எனவே உங்கள் வாக்குகளை இவற்றைக் கருத்திற் கொண்டு எமது ஐக்கிய மக்கள் சக்தி தொலைபேசி சின்னத்திற்கு வாக்களித்து எமது அணியை அரியாசனம் அமர்த்த முன்வாருங்கள் என்று அறை கூவி அழைக்கிறேன்.



# சுத்தமான இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் வடமத்திய மாகாண வழிகாட்டல் குழு கூட்டம்



(எம்.ரீ. ஆரிப்)

பொறுப்பு மற்றும் நிலைத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட சமூக அடிப்படையிலான செயற்திட்டமான சுத்தமான இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் வடமத்திய மாகாணத்தின் வழிகாட்டல் குழு மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் மாகாண சபை மண்டபத்தில் (09) கூடியது.

இத்திட்டத்தின் அடிப்படைத் திட்டம் இங்கு முன்வைக்கப்பட்டது. அதன்படி கழிவுகளை குறைத்தல் , விழிப்புணர்வை ஏற்படுத்தல் , சுற்றுச்சூழல் அமைப்புக் களைப் பாதுகாத்தல் , சுற்றுச்சூழலுக்கு உகந்த பழக்கவழக்கங்களை ஊக்குவித்தல், சமூகப் பங்கேற்பை மேம்படுத்துதல் போன்றவை இதன் அடிப்படை திட்டமாகும்.

குறித்த செயற்திட்டத்திற்கு தேவையான செயற்பாடுகளை மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களாக அடையாளப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. இதன் செயற்பாடுகள் மூன்று பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக குறுகிய காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யவும்.

நடுத்தர காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை 1- 3 வருட காலப்பகுதியிலும் நீண்ட கால சேயற்பாடுகளை 4 - 5 வருட காலப் பகுதியிலும் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகள் மட்டுமின்றி புனித நகரின் புனித தலங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படும் 14 டன் பிரசாதம் பால் உணவுகள் பூக்கள் போன்றவை மட்டும் தினமும் அகற்றப்பட்டு அழிப்பதற்கு பிரதேசத்தில் அதற்கான தனி இடம் உருவாக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதான அமைச்சின் செயலாளர் கே.எம்.எச்.எஸ்.கே.ஜயலத் ஆளுநரின் செயலாளர் விஜய வனசிங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# 158 வது வருட ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸ்



**பேருவளை பீ.எம் முக்தார்**

பேருவளை மருதானை அஸ்ஸ ாவியதுல் பாஸியா லித்தரீகதுஷ் ஷாதுலியா மருதானை ஸ ாவியாவில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸ்

இவ்வருடமும் 19.04.2025 சனிக்கிழமை பின் நேரம் ஞாயிற்றுக்கிழமை இரவு கழிபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் ரபீக் பஹ்ஜி அவர்களின் தலைமையில் ஆரம்பம் செய்யப்படுகிறது தொடர்ந்து ஒன்பது நாட்கள் மனாகிபுஷ் ஷாதுலி ஓதி பத்தாவது நாள் தமாம் மஜ்லிஸ் 28.04.2025 திங்கட்கிழமை பின் நேரம் செய்வாய் கிழமை இரவு நடைபெறும்.

முதல் நாள் மஜ்லிஸ் மஹ்ரிப் தொழுகைக்கு பிறகு வழிபா யாகூத்தியா ஹம்ஸியா இஷா தொழுகைக்கு பிறகு மனாகிப் ஷாதுலி முஸாக்கரா நடைபெறும்.

கழிபதுஷ் ஷாதுலி மௌலவி அஹ்மத் சூபி மஹ்லரி முஸாக்கரா நிகழ்த்துபவரர் துஆ மற்றும் யாஸீன் ஜலாலாவுடன் நிறைவுபெறும் .

அனைவரும் கலந்து சிறப்பித்து ஷாதுலி நாயகம் அவர்களின் துஆ பரகத்தை பெற்றுக் கொள்ளுமாறு பள்ளிவாசல் மற்றும் ஸாவியா நிர்வாகம் கேட்டுக்கொள்கின்றது.

# பாரிய சமூகப் பணிகளை முன்னெடுக்கும் மருதானை நலன்புரி அமைப்பு



Maradana Charity அமைப்பு, பேருவளை பிரதேசத்தில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக சமூக அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வரும் சமூக அமைப்பாகும். அண்மையில் பேருவளை ஜாமிஆ நளீமியா இஸ்லாமிய கலாபீடத்தில் Maradana Charity அமைப்பு உத்தியோகபூர்வமாக அங்குரார்பணம் செய்து வைக்கப் பட்டது. Maradana Charity அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் அப்துல் காதர் பாச்சா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜாமிஆ நளீமிஆ இஸ்லாமிய கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷேக் ஏ.சி. அகர் முஹம்மத் பிரதம அதிதியாகவும், மற்றும் கௌரவ அதிதியாக தொழிலதிபர் அல்ஹாஜ் அஹ்ஸன் றிபாய் ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு Maradana Charity அமைப்பின் இலட்சினையை அங்குரார்பணம் செய்து வைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மற்றும் மதத்தலைவர்கள், அறிஞர்கள், நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள், தொழில் வல்லுநர்கள், மஸ்ஜித் தர்மகர்த்தாக்கள், பாடசாலை அதிபர்கள், சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் தன்னார்வலர் கள் என பேருவளை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

"ஐக்கியத்துடன்கூடிய சமூக அபிவிருத்தியை நோக்கி" எனும் தொனிப்பொருளில் Maradana Charity அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பேருவளை பிரதேசத்தில் அறிவுமயப் படுத்தப்பட்ட சமூகமொன்றை கட்டி எழுப்புவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு பிரதேச பாடசாலைகளில் பல கல்வி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலை, பல்கலைக்கழகம், மற்றும் தொழில் கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கான புலமை பரிசில்கள். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உளவள ஆலோசனை கருத்தரங்குகள், தொண்டர் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதல், விசேட மேலதிக நேர வகுப்புக்கள் போன்ற பல்வேறு கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாகவும், இவற்றை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளை ஒரு வலையமைப்புக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்நிகழ்வில் Maradana Charity அமைப்பின் பொதுச் செயலாளர் ரூமி ஹாரிஸ் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

மேலும் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட ஜாமிஆ நளீமிஆ இஸ்லாமிய கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷேக் ஏ.சி. அகர் முஹம்மத் மற்றும் தொழிலதிபர் அல்ஹாஜ் அஹ்ஸன் றிபாய் ஆகியோர் Maradana Charity அமைப்பின் செயற்பாடுகளை பாராட்டியதோடு தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச பாடசாலை அதிபர்களான திரு. எஸ் குமார், ஜனாப் அப்துல் ரஹ்மான் மற்றும் திருமதி யஹ்யா பாரூக் ஆகியோர் தங்களது பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களையும் இந்நிகழ்வில் முன் வைத்ததோடு அதற்கான தீர்வுகளை Maradana Charity அமைப்பிடம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தனர்.

கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பேருவளை பிரதேசத்தில் பல்வேறு வறுமை ஒழிப்பு திட்டங்களை Maradana Charity அமைப்பு முன்னெடுத்ததோடு கொரோனா காலத்தில் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் விசேட கொரோனா பிரிவு ஒன்றை புனர்நிர்மாணம் செய்து கொடுத்ததோடு ஒக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்ட போது பிரதேசத்தில் இலவச ஒக்சிஜன் விநியோகத்தையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தன்னை ஜனாதிபதியாக இன்னும் உணர்ந்து கொள்ளாத ஜனாதிபதி

## முன்னாள் தவிசாளர் ரனூஸ் இஸ்மாயில்

**(நூருல் ஹுதா உமர்)**

அச்சுறுத்தி வாக்கு கேட்பதும் வாக்கு போட வேண்டாம் என்று சொல்வதும் பாரதூரமான குற்றம். பிள்ளையானை அரசியல் உள்நோக்கத்துடன் கைது செய்திருந்தால் அதுவும் குற்றம். ஜனாதிபதியின் உரைகள் சொல்ல வருவது என்ன? ஊழல், வன்முறை, குற்றம் இவைகளை தடுப்பதற்கும் சீர் செய்வதற்கும் சட்டங்கள் இருக்கிறது. சட்டம் ஒழுங்கை நிறைவேற்றக்கூடிய நிறுவனங்களை சரியாக இயக்கினால் இந்த குற்றம் ஊழல் வன்முறை மற்றும் அனைத்து விதமான சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் நிர்வாக சீர்கேடுகள் இவைகள் எல்லாவற்றையும் நிவர்த்திக்க முடியும். இதுதான் உண்மையான முறைமை மாற்றம். சிஸ்டம் சேஞ்ச் என சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை முன்னாள் தலைவருமான ரனூஸ் இஸ்மாயில் அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், ஜனாதிபதியின் அண்மைய கிழக்கு மாகாண விஜயத்தின் போது அவர் ஆற்றிய உரைகள் முறைமை மாற்றத்தை ஏற்படுத்த கூடிய தகைமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா எனும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாரிய சமூக அழுத்தங்களுக்கு மத்தியில் பிணையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கும் ருஷ்டியின் கைது குறித்தும் அதற்கான காரணம் குறித்தும் ஜனாதிபதி சொன்ன விளக்கம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அவருடைய விரைவான பிணை விடுதலையும் அவரை கைது செய்ததற்கான காரணமும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற மிகவும் கடுமையான கொடூரமான சட்டம் ஒன்றை பயன்படுத்தி அவரை கைது செய்திருக்க தேவையில்லை எனும் நியாயமான விடயத்தை சட்டம் தெரிந்தவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

மட்டக்களப்பில் ஜனாதிபதி உரையாற்றுகின்ற பொழுது மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்காவிட்டால் மத்திய அரசாங்கத்தில் இருந்து அபிவிருத்திக்கான நிதிகளை ஒதுக்க மாட்டோம் என்றும் நாங்கள் இப்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறோம் குறிப்பாக நாங்கள் ஒரு கைதை (இங்கே இவர் மறைமுகமாக முன்னாள் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்று அழைக்கப்படும் பிள்ளையான் என்பவருடைய கைதைத்தான் கூறினார்) செய்திருக்கிறோம் என்று கூறினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் பிள்ளையான் அவர்களுடைய கை-துக்கும் மட்டக்களப்பு மாநகர சபை வெற்றிக்கும் ஒரு நாட்டின் ஜனாதி-பதி இவ்வாறு தொடர்புறுத்தி பேசியது கொஞ்சமும் நாகரீகம் அல்ல. பிள்ளையான் அவர்களுடைய கைது ஒரு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை ஜனாதிபதி தெளிவாகவே கூறியிருக்கிறார். எங்களுக்கு வாக்களியுங்கள் என்று வாக்கு கேட்பது ஜனநாயகம் ஆனால் இன்னும் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் அவ்வாறு வாக்களித்தால் அரசாங்கமாக நாம் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறி விடுவோம் என்று அச்சுறுத்தி வாக்களிக்காமல் தடை செய்வதும் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் மிகவும் பிழையானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது இந்த நாட்டு மக்கள் வைத்த மிகப்பெரிய நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும் என்பதே எனது அவா.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும் ஜனாதிபதியின் அதிகாரம் இருக்கும் போது எதிர்க்கட்சி போன்று இன்னும் குறை கூறிக் கொண்டு குற்றம் கூறிக்கொண்டும் இருக்காமல் காரியத்தை முன்னிறுத்தி வாக்கு கேட்பது இந்த அரசாங்கத்திற்கு ஆரோக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

## உடதலவின்ன மடிகேயில் நூலகம், கலாசார நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு





கண்டி உடதலவின்ன மடிகேயில் புதிய பொது நூலகம் மற்றும் கலாசார நிலையத்துக்கான மூன்று மாடிவசதிகொண்ட கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று பிரதேச மஸ்ஜிதுகளின் தலைவர்கள் முக்கிய பிரமுகர்களது பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சியம்பலாகஸ்தென்ன மஸ்ஜித் தலைவரும் ரோயல் மருந்தக உரிமையாளருமான ஏ.ஆர்.எம்.நியாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முதலில் தேசியக் கொடியை ஏற்ற-வைத்து பின் கட்டிடத்துக்கான அடிக்கல்லை நட்டிவைத்ததுடன் இக்கட்டிட நிர்மான பணிகளுக்காக இவர் இரண்டு மில்லியன் ரூபா அன்பளிப்பு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதி நியாஸ் மற்றும் பிரமுகர் நிலாப்தீன் ஆகியோரது சேவைகளுக்காக அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கட்டிடத்துக்கான காணியை இவ்வூர் சமூக ஆர்வவர் ஜமால்தீன் முக்தார் அன்பளிப்புச் செய்துள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு



**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஹெல்த் சென்டருக்குச் சொந்தமான வளாகம் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் பூரணமாக சுத்தம் செய்யப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவரும் மற்றும் அரசியல் பேரவையின் உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒவ்வொரு வேலைத்திட்டமும் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலயத்துக்கு முன்பாகவும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் ஹெல்த் சென்டருக்குச் சொந்தமான இவ்வளாகத்தில், பல வருட காலமாக குப்பைகள் நிரம்பியும் நுளம்புகள் தாக்கம் காரணமாகவும் மற்றும் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாலும் இவ்வளவினை சுத்தப்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் ஆதம்பாவா எம்.பி.யிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, கல்முனை மாநகர சபையினால் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டைச் சுத்தப்படுத்தும் இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இதற்காக முன்னின்று செயற்பட்டுவரும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா உட்பட இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.






நாச்சியாதீவு பர்வீன்

# "கடல் முற்றம்" ஆர்த்தெழும் பெண் குரல்

**லறீனா அப்துல் ஹக்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்.
மொழிகள் துறை.
சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

எளிய அழகிய மொழியில் விடியலைத் தேடியபடி ஆரம்பமாகிறது, 'கடல் முற்றம்'. சென்னை மோக்லி பதிப்பக வெளியீடாய் 50 கவிதைகளின் தொகுப்பாய் இத்தொகுதி வெளிவந்துள்ளது.

ஃபாயிஸா அலி பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை, கவிதாயினி, சிறுவர் இலக்கியப் படைப்பாளி, இலக்கிய விமர்சகி, சிறுகதை, பத்தி எழுத்தாளர் எனப் பல்பரிமாணம் கொண்டவர்.

இவர் 2011 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான (தங்க மீன் குஞ்சுகள்) தமிழியல் விருதினையும், கவிதைத் தொகுதிக்காக (எஸ்.ஃபாயிஸா அலி கவிதைகள்) 2013 ஆம் ஆண்டில் அரச சாகித்திய விருதினையும், கிழக்கு மாகாண சாகித்திய விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது களிப்போடு பயணம் செய்வோம் என்ற சிறுவர் பாடலானது தரம் நான்கு தமிழ் மொழிப் பாட நூலில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.


வார்க்கப்பட்ட பாலின அடையாளங்களுக்கு அப்பால், ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினர் ஒருங்கிணைந்ததே சமுதாயமாகும். அவர்களுக்கு இடையிலான உறவு நிலைகள், ஊடாட்டங்களின் வழியே ஒரு சமுதாயத்தின் இயங்கியல் நிர்ணயிக்கப்படுகின்றது. கலையும் இலக்கியமும் அவ்வியங்கியலின் வெளிப்பாடுகளாய் அமைகின்றன. "சமுதாய உறவினின்றும் பிறப்பெடுக்கும் கவிதை, அவ்வுறவுகளின் பிரதிபலிப்பாகவும் அமைகிறது. இயற்கையோடும் வாழ்க்கையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டது கலை என்பது நன்கு விளங்கும். அதனால் கலையானது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் பகுதி பகுதியாகவோ முழுமையாகவோ எடுத்தாள வேண்டியதாக பிரதிபலிக்க வேண்டியதாக படம் பிடிக்க வேண்டியதாக உள்ளது." (ஒரு சில விதி செய்வோம், கவிதைச் சிந்தனைகள், 1972:35) என்னும் இ. முருகையனின் கூற்று இதனுடன் தொடர்புறுத்தி நோக்கத்தக்க ஒன்றாகும். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்ற பாரதியின் விடுதலை முழக்கம் என்றோ பிறந்துவிட்ட நிலையிலும், சமூகத்தில் சரிபாதியினரான பெண்களின் சமகால நிலையென்ன, அவள் குறித்த கலையிலக்கிய வெளிப்பாடுகள் எவ்விதம் அமைந்துள்ளன என்ற கேள்விகள் மிக முக்கியமானவை.

எந்தவொரு சமூகத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே, பெண் என்பவள் யார், அவள் எப்படி இருப்பாள், எப்படிச் செயற்படுவாள் என்ற கற்பிதங்கள் ஆண்மையவாதச் சமூக மனங்களால் காலங் காலமாய்க் கற்பனிக்கப்பட்டன. அவை கருத்துக்களாய், கவிதையாய், கதையாய், காவியமாய் எனக் கட்டமைக்கப்பட்டு காலப்போக்கில் கருத்தியல்களாக வடிவமைக்கப்பட்டு 'கல்பு' (மனசு) கள் தோறும் திணிக்கப்பட்டமை வரலாறு. அதன் விளைவாகப் பெண் என்பவள் இரண்டாந்தர உயிரியாய் ஆக்கப்பட்டாள்.

பல்வேறு தருணங்களில் அவள் ஓர் உயிரி என்பதே மறக்கடிக்கப்பட்ட நிலையில் ஓர் உடைமையாய், போகப் பொருளாய் அஃறிணை போலும் நடத்தப்பட்டாள். ஆண்மையவாதச் சிந்தனை ஆண் - பெண் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் மனித மனங்களில் மிக ஆழமாக வேரூன்றிப் படர்ந்து கருத்தியல் தளத்திலும் செயற்பாட்டுத் தளத்திலும் பல்வேறு முகங்களோடு வெளிப்பட்டுத் தோன்றியது.

உண்மையில், பெண் பால்மை என்பது பிறப்பினால் கிட்டும் ஒரு வரந்தான். எனினும், உடை, நடை, பாவனை, மொழி, விருப்பு வெறுப்பு இவை அனைத்துமே இன்னின்ன விதமாய் அமைதல் வேண்டுமென ஆண்டாண்டு காலமாய்க் கட்டமைத்து வார்க்கப்பட்ட பாலின அடையாளங்களுக்குள் மொத்தமாய் அமிழ்த்தித் தன் சுய அடையாள அழிப்பினை நிகழ்த்துமாறு பெண் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிர்ப்பந்திக்கப்பட்டாள். இந்நிலையில், பால்நிலைச் சமத்துவம் குறித்த பிரக்ஞை உணர்வுள்ள பெண்கள் பலர் தம் சுயத்தை இழக்க விரும்பாமல், தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சகல விதமான ஒடுக்குதல்களுக்கும் எதிராகத் தமது குரல்களைப் பதிவுசெய்து வந்தனர். அவ்விதம், தன் சுயத்தையும் சுயாதீனத்தையும் இழக்க விரும்பாமல் ஆர்த்தெழ விழையும் பெண்குரலின் மெல்லிய இழையினைப் பற்றித் தனது கவிதா வரிகள் தோறும் பரவ விட்டிருக்கிறார் ஃபாயிஸா அலி எனும் இக்கவிதை சொல்லி.

"உடுப்பவை மட்டுமல்ல
எனக்கான எதையுமே
தீர்மானிக்க வேண்டியதும்
தெரிவதும் அவர்களுமல்ல
இவர்களுமல்ல...
நான் மட்டும்." (ஹிஜாப்) என்ற வரிகள் தற்தீர்மானத்தின் உறுதியை முன்மொழிகின்றன. இவ்விடத்தில், "ஒரு பெண் தன் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மிக முக்கிய பங்கு வகிப்பது உடல். தன் உடலை மீள்வாசிப்புச் செய்வது அதன் முதல் கட்டம். இம்முயற்சியில் இறங்கும்போதுதான் மீள்வாசிப்புச் செய்வதற்கு உடலை மீட்டெடுப்பது அவசியம் என்று தெரிகின்றது. மீட்டெடுப்பது சாதாரண வேலையில்லை. காரணம் முள் படுக்கையில் கிடத்தி முட்களால் போர்த்திய உடல், பண்பாட்டு முட்கள், மொழி முட்கள், இலக்கண முட்கள், சம்பிரதாய முட்கள், சடங்கு முட்கள், அரசியல் முட்கள், வேலி என்று நினைத்துத் துளைக்க விட்ட முட்கள், அரண் என்று நினைத்து அரவணைக்கவிட்ட முட்கள் என்று ஓராயிரம் முட்கள். உடலுக்கு உரிமை கொண்டாடும்போதே தொடங்கிவிடுகிறது கீறல்களும் காயங்களும்" (நிவேதினி, இதழ் - 10, 11/2005:VI)




எனும் செல்வி திருச்சந்திரன் மற்றும் அம்பை இருவரும் இணைந்து வெளியிட்ட கூற்று நினைவுகூறத்தக்கது. ஆப்பிரிக்க எழுத்தாளர் கூகி வா தியாங்கோ குறிப்பிடும்போது, "ஒவ்வோர் எழுத்தாளரையும் அவர் பிறந்து வளர்ந்த சூழமைவு, வாழ்க்கை குறித்த அவரது முழுமையான அனுபவம், அதில் எதிர்கொண்ட போராட்டங்கள் முதலானவையே வார்த்தெடுக்கின்றன" என்பார். ஃபாயிஸாவின் கவிதைகளில் அவரது வாழ்வனுபவத்தின் தரிசனங்களைத் தனக்கே உரிய வித்தியாசமானதும் தனித்துவமானதுமான மொழிநடையில் முன்வைத்திருப்பதைக் காணலாம். வாழ்வனுபவம் எனும்போது, அது அவரவர் சொந்த வாழ்வனுபவமாகத்தான் இருத்தல் வேண்டும் எனும் அபத்தக் கற்பிதம் பெண்ணெழுத்துக்களைப் பொருத்துமட்டும் மேலெழுந்து விடுவதை அழுத்தமாகக் கடக்கத் தெரிந்த பெண்களாலேயே சமூகத் தளத்தில் 'வாழ்தல்' குறித்த, 'சமூகம்' குறித்த, சக பெண்கள் குறித்த தமது தரிசனங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்க்கின்றது எனலாம்.

இதனையே, "பெண்ணுடைய நுண்திறன், பரந்த சிந்தனை, கல்வி, தொழில் ரீதியான அனுபவங்கள், இயலாமைகளின் அழுத்தங்களால் எழும் கோபம், உயிர்வாழும் காலம் முழுவதிலும் பெண் தனக்கு வழங்கக்கூடிய முக்கியத்துவம், தன்னுடைய வாழ்வை சரியென்று எண்ணும் நியாயத்துடன் எதிர்கொள்ள அவளுக்குள்ள உரிமை அனைத்தையும் சேர்த்துப் படையாகத்திரட்டி போர்புரியத் தொடங்குகிறாள். முதற்கட்டமாகத் தனக்குள்ளே.

அடுத்த கட்டமாகத் தனக்கு வெளியே. சொற்களைக் கூர்மையாக்கி இருப்புப் பாளமாய் சமூகம் எழுப்பியுள்ள அகன்ற தூண்களை அகற்றப் போராடுகிறாள்" என கவிஞர் அனார் இந்நூலுக்கான முன்னுரையில் சொல்லிச் சென்றுள்ளார்.

அவ்வகையில்,

"உன்னைப்போலவே
சிந்திக்கவும்
கவிதைபாடவும்
வான் கடல் நிலமென
உன்பாதந்தொடும்
எல்லாச் சந்து பொந்துகளிலும்
தொய்வேதுமின்றியே
உனக்கு
சமனும் சமாந்தரமுமாய்
பயணப்படவுங்கூட என்னால்
முடியும்.
ஆனாலும்,
உல்லாசமும் சுதந்திரமும்
உனக்குமட்டுமே என்றான இப்
பயணங்களை விட்டும்
விஷமப்பார்வையொன்றே
எனைத்தூரமாக்கி
விடுவதெல்லாம்
எனது அறையிலும்
நமது அறையிலும்.
ஒருபொறியின்
தொடர்ச்சியான இயங்குகை
உனக்கவசியம் என்பதனாலா
இல்லை
நான்
பெண்ணென்பதனாலா?"
(சமனும் சமாந்தரமுமாய், ப.38) எனும் வரிகளினூடே மூடுண்டதும் கட்டிறுக்கமானதுமான சூழமைவின் அழுத்தங்களை, ஒடுக்கப்படுதலின் வலிகளைக் கிளர்த்தி ஒரு வினாவை எழுப்புகின்றார், கவிதைசொல்லி. மேலும்,

"ஆடியில் தற்செயலாய் ஒட்டிப்
பிரிந்த
பெருவிரலின்
பெருப்பிக்கப்பட்ட
நகவிடுக்கினில்
அப்பிக் கிடந்த அழுக்கின் கருமை
விழிகளை சட்டென உலுக்கிட
தொப்பென வீழ்கையில்
நடுக்கங்களோடுதான்
ஞாபகங்கொள்கிறேன்
அவசர அவசரமாய்
சமைக்கக்கழுவிய கறிச்சட்டியை
இது வானமல்ல என்பதை
கூடவே
நான் யாரென்பதை."
(கருமை, ப.44 ) என்ற வரிகள்ல அனைத்துவிதமான அடையாளங்களையும் மீறி, பெண்ணின் பாலினம் அவளுடைய சுயத்திற்குள்ளேயே துருத்திக் கொண்டு வெளிநோக்கி நீள்வதன் அவஸ்தையினை உணர்த்துகின்றன.

"பொன் மஞ்சள் ஒளியினிலே" எனும் கவிதையில், இருவேறு குவியங்களில் மாறி மாறி ஒருங்கும் பெண் அனுபவத்தை வெற்றுப் புலம்பலாக விமர்சித்து நகரும் மேதமைகள் உணர்வதே இல்லை, பெண்ணின் நுண்ணுணர்வின் தளங்களை ஊடுருவிச் செல்லும் சாத்தியமேயற்ற தமது போதாமைகளை என்பதை அழுத்தந்திருத்தமாக உணர்த்துமாப்போல் அமைந்துள்ளன, பின்வரும் வரிகள்:

"இப்போதென் நாற்காலிக்குள் நீ
வந்தமர்கிறாய்
மெல்லக்குறுகி
ஒளிநாடி வளருமொரு தொட்டிச்
செடியாகிறேன்
சாதனங்களும்
துணைச்சாதனங்களும்..
இன்னும் பலவுமென
எல்லாமும் நீயேயாகி
நிகழ்த்தப்படும்
முன்வைத்தல்களில்
என் தீப்பெட்டியறை விரிந்து
பெருஞ் சூரியகாந்திக்காடாகி
பரவும்
பொன்மஞ்சள் ஒளியினிலே
நசிந்து மூச்சுத்திணறும்." (பக்.40-41)

பெரும்பாலும் பெண்ணின் அனுபவ வெளி என்பது பல்வேறு நெருக்கடிகளும், சிக்கல்களும் மூச்சுத் திணறல்களும் புதுமைகளும் புதிர்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததுதான். உள்ளும் புறமுமாய் தனக்கான வாழ்தல் என்பதே அற்றுப்போய், யார் யாரின் பொருட்டோ எவரெவரோ வகுத்துவைத்த விதிமுறைகளுக்கு அமைவாக, எவரெவரையோ திருப்திப் படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்ட 'பெண் விம்பமே' நம்மைச் சுற்றிலும் ஊடாடித் திரிகின்றது. சுயமாகச் சிந்தித்து, எதிர்த்துக் கேள்விகளை எழுப்பாத வரை, தனது மாற்றுக் கருத்துக்களை முன்வைக்காதவரை, தனது விருப்பு வெறுப்புகள் சார்ந்து வெளிப்படைத் தன்மையோடு இயங்க முற்படாதவரை அவள் 'நல்ல பெண்'ணாக வலம் வரலாம். இல்லாத பட்சத்தில் அவளுக்கெனப் பிரத்தியேகமான எத்தனையோ எதிர்மறைப் பட்டங்கள் பட்டியலாய் நீளும்.

பெண் மௌனித்து இருத்தலை அவாவும், அவளது சுயாதீனச் செயற்பாடுகள் முற்றுப்புள்ளியின் திசைநோக்கித் திரும்பி ஸ்தம்பித்தலை மறைமுகமாய் வற்புறுத்தும் வன்மமானது, "உணர்பரப்பெங்கிலும் சதாவும் வன்னமிலமொன்றையே பெய்தபடித் தொடரும் நெடுமௌனமாக" நீளவும்கூடும் என்பதைச் சொல்லிச் செல்கிறது, "முற்றுப்புள்ளியின் திசை" (ப.50). அவ்வாறே, " இனியும் பொழியேன்" கவிதையில்,

பகலவன் வெம்மையில்
படியிறக்கங் காணுமொரு
பொலித்தீனாய்
தினந்தினம் வெம்பி
வெளுக்கிறதென் மென்மனசு
உன் தொடர் புறக்கணிப்புகளால்
இன்னமும் எத்தனை
தடவைகள்தான்
தன்மானத்தைப் பிணை தருவது?"
(ப.64) என்ற கேள்வியினூடே முன்வைக்கப்படுகிறது.

ஆக, வன்மம் என்பதும் வன்முறை என்பதும் எப்போதும் பௌதீக உடல்சார்ந்த தாக்குதலாகத்தான் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. மாறாக, அது புறக்கணிப்பினூடான, கொடுமௌனத்தினூடான, எள்ளலின் வழியான உளவியல்சார் எதிர்ச்செயற்பாடாகக்கூட அமையலாம் என்பதையும் தெளிவுறுத்தி நிற்கும் இதுபோன்ற பல வரிகளைக் கவிதைசொல்லி பதிவுசெய்துள்ளார். இத்தொகுதியில் உள்ள, "தகனம்" (ப. 15) எனும் கவிதை, தன் படைப்புக்களை ஒன்றுதிரட்டிக் கொளுத்திப்போடுவதன் மூலம் தன்னையே எரியூட்டிக் கொள்ளும் ஓர் ஆன்மாவின் விசும்பலை வரிகளுக்குள் வசப்படுத்தித் தருகிறது. இத்தகைய சுயசிருஷ்டி எரிப்பினை அல்லது தன்னுணர்வுத் தகனத்தினை சிருஷ்டித் திறனுள்ள எத்தனையோ பெண்கள் கடந்துதான் இருப்பர். உண்மையில், தகனம் என்ற பிரயோகம் பிணத்தினை எரிப்பதற்குப் பயன்படுவதுதான். எனினும், இங்கே அது உணர்வுகள்

அடுத்த வாரம் தொடரும்...

# ஈரான் - அணு ஆயுத பேச்சுவார்த்தை...!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இந்த உலகில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் பல்வேறு நிலைகளில் உருவெடுத்து வரும் நிலையில் ஈரான் மற்றும் அமெரிக்க இடையே நடைபெறும் பேச்சுவார்த்தை குறித்தான முடிவுகள் குறித்து அறிந்து கொள்வதில் உலகம் மிகவும் ஆர்வமாக இருந்து வருகிறது. இது சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.இரானின் சர்ச்சைக்குரிய அணுசக்தி திட்டம் தொடர்பாக புதிய ஒப்பந்தத்தை எட்டுவதற்காக அமெரிக்காவும் ஈரானும் வரும் சனிக்கிழமை (ஏப்ரல் 19) முதல் பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளன. ஏற்கனவே கடந்த 12 ந் தேதி சனிக்கிழமை அன்று மிகவும் முக்கியமான பேச்சுவார்த்தை ஒமனில் நடை பெற்ற நிலையில் இரண்டாடவது முறை பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது.

“ஈரானின் அணுசக்தி திட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு ஈடாக, பிராந்திய பதட்டங்களைத் தணித்தல், கைதிகள் பரிமாற்றம் மற்றும் ஈரானுக்கு எதிரான தடைகளைத் தளர்த்துவதற்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தங்கள் ஆகியவை பேச்சுவார்த்தைகளின் தற்போதைய கவனம் செலுத்தும்” என்று ஓமானிய வட்டாரம் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்துள்ளது.

தனது முதல் பதவிக்காலத்தில், 2015 ஆம் ஆண்டு தெஹ்ரானுடனான ஒரு பெரிய வல்லரசு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்ட டிரம்ப், வாஷிங்டனின் கூட்டாளியான இஸ்ரேல் தனது இருத்தலியல் அச்சுறுத்தலாகக் கருதும் ஒரு மத்திய கிழக்கு சக்திக்கு மீண்டும் கடுமையான அணுகுமுறையைக் கொண்டு வந்துள்ளார்.

அதே நேரத்தில், 2023 அக்டோபரில் பாலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸ் காசாவிலிருந்து இஸ்ரேலைத் தாக்கிய பின்னர், ஹமாஸுடனான போரின் போது, ஈரானில் வான்வழித் தாக்குதல்கள் உட்பட, பிராந்தியம் முழுவதும் இஸ்ரேல் நடத்திய இராணுவத் தாக்குதல்களால் ஈரானும் அதன் நட்பு குழுக்களும் பலவீனமடைந்துள்ளன. வியன்னாவில் உள்ள சர்வதேச அமைப்புகளுக்கான ரஷ்யாவின் தூதர் மிகைல் உல்யனோவ், பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு தரப்பினரும் வெளியிட்ட அறிக்கைகளை “ஊக்கமளிப்பதாக” அழைத்தார்.

பேச்சுவார்த்தைகள் ஒரு ஒப்பந்தத்தை எட்டக்கூடும் என்ற சந்தேகத்துடனும், மேற்கத்திய நாடுகளால் அணு ஆயுதங்களுக்கான சாத்தியமான பாதையாகக் கருதப்படும் ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை நிறுத்தாவிட்டால், அதன் மீது குண்டு வீசுவதாக பலமுறை மிரட்டல் விடுத்த டிரம்ப் மீது சந்தேகத்துடனும் தெஹ்ரான் எச்சரிக்கையுடன் பேச்சுவார்த்தைகளை அணுகியது.


இரு தரப்பினரும் சில முன்னேற்றங்களுக்கான வாய்ப்புகளைப் பற்றிப் பேசியிருந்தாலும், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடிக்கும் ஒரு சர்ச்சையில் அவர்கள் வெகு தொலைவில் உள்ளனர். ஈரான் நீண்ட காலமாக அணு ஆயுதத் திறனைத் தேடுவதை மறுத்து வருகிறது, ஆனால் மேற்கத்திய நாடுகளும் இஸ்ரேலும் அது ஒரு அணுகுண்டை உருவாக்குவதற்கான வழி முறைகளை உருவாக்க இரகசியமாக முயற்சிப்பதாக நம்புகின்றன.

“இது ஒரு ஆரம்பம். எனவே இந்த கட்டத்தில் இரு தரப்பினரும் ஓமானி இடைத்தரகர் மூலம் தங்கள் அடிப்படை நிலைப்பாடுகளை ஒருவருக்கொருவர் முன்வைப்பது இயல்பானது,” என்று ஈரான் செய்தி தொடர்பாளர் இஸ்மாயில் பாகாய் கூறினார்.

2023 ஆம் ஆண்டு முதல் காசா மற்றும் லெபனான் போர்கள், ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே ஏவுகணை தாக்குதல்கள், செங்கடல் கப்பல் போக்குவரத்து மீதான ஹவுத்தி தாக்குதல்கள் மற்றும் சிரியாவில் அரசாங்கத்தை கவிழ்த்தல் போன்றவற்றால் எரிந்து கொண்டிருக்கும் ஒரு பிராந்தியத்தில் பதட்டங்களைத் தணிக்க முன்னேற்றத்தின் அறிகுறிகள் உதவும்.

இருப்பினும், தோல்வி உலகின் எண்ணெயின் பெரும்பகுதியை ஏற்றுமதி செய்யும் ஒரு பிராந்தியத்தில் பரந்த அளவிலான மோதலை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை அதிகரிக்கும். அமெரிக்க தளங்களைக் கொண்ட அண்டை நாடுகள் ஞீநுஊ உறுப்பினர் மீது எந்தவொரு அமெரிக்க இராணுவத் தாக்குதலிலும் ஈடுபட்டால் “கடுமையான விளைவுகளை” எதிர்கொள்ள நேரிடும் என்று தெஹ்ரான் எச்சரித்துள்ளது.”மற்ற தரப்பினர் (அமெரிக்கா) சமமான நிலைப்பாட்டுடன் பேச்சுவார்த்தையில் நுழைந்தால், மேலும் பேச்சுவார்த்தைகள் குறித்த ஆரம்ப புரிதலுக்கான வாய்ப்பு உள்ளது” என்று அரக்சி ஈரானிய தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

முக்கிய அரசு விவகாரங்களில் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் கொண்ட ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி, பேச்சு வார்த்தைக்கு அராக்கிற்கு “முழு அதிகாரத்தையும்” வழங்கியுள்ளார் என்று ஈரானிய அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தார். ஈரான் தனது பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டம் போன்ற பாதுகாப்புத் திறன்களைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதை நிராகரித்துள்ளது. அணு எரிபொருள் மூலமான யுரேனியத்தை ஈரான் செறிவூட்டுவது, ஒரு சிவிலியன் எரிசக்தி திட்டத்தின் தேவைகளை விட அதிகமாக சென்று, போர்க்கப்பல்களில் தேவைப்படும் அளவுக்கு நெருக்கமான பிளவு தூய்மையின் அளவில் இருப்புக்களை உற்பத்தி செய்துள்ளதாக மேற்கத்திய நாடுகள் கூறுகின்றன.பிப்ரவரி முதல் தெஹ்ரான் மீது “அதிகபட்ச அழுத்தம்” பிரச்சாரத்தை மீட்டெடுத்து வரும் டிரம்ப், 2018 ஆம் ஆண்டு தனது முதல் பதவிக்காலத்தில் ஈரானுக்கும் ரஷ்யா மற்றும் சீனா உட்பட ஆறு உலக வல்லரசுகளுக்கும் இடையிலான 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை கைவிட்டு, இஸ்லாமியக் குடியரசின் மீது மீண்டும் முடக்கும் தடைகளை விதித்தார்.அப்போதிருந்து, ஈரானின் அணுசக்தி திட்டம் முன்னேறியுள்ளது, இதில் யுரேனியத்தை 60% பிளவு தூய்மைக்கு செறிவூட்டுவதன் மூலம், ஒரு குண்டுக்குத் தேவையான அளவுகளிலிருந்து ஒரு தொழில்நுட்ப படியாகும்.



2018 ஆம் ஆண்டு இரான் மற்றும் உலக வல்லரசு நாடுகள் இடையிலான முந்தைய அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டார் டொனால்ட் டிரம்ப். மேலும் அந்நாடுகள் மீது பொருளாதார தடைகளை அமல்படுத்தினார். இது இரானை கோபப்படுத்தியது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையாக ஈரானின் எதிர் நிலை காரணமாகவும் மத்திய கிழக்கு நாடுகளில் பாலஸ்தீன மக்களை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்து வரும் நிலையில் தற்போது இந்த பிரச்சினை கொதி நிலை அடைந்து வருகிறது இந்த பேச்சுவார்த்தை வெற்றிபெறவில்லை என்றால் ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று டிரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு பல்வேறு அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார். இந்த நிலையில், அணு ஆயுத உற்பத்தியை ஈரான் அதிகரித்திருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து அதிபர் ட்ரம்ப், அவர்களுக்கு கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். அணு ஆயுத உற்பத்தி பற்றிய குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மறுத்து வரும் ஈரான், ஒப்பந்தத்தை புதுப்பிக்க முயற்சிகள் எடுத்து வருவதாகக் கூறியிருந்தது.

கடுமையான வரம்புகள் கொண்ட அணு ஆயுதத் திட்டங்கள் தொடர்பான புதிய ஒப்பந்தத்திற்கு ஈரான் அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியிருந்தது.

இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் நிராகரித்தார். ஈரான் நாட்டின் தலைமை மதகுருவான அயதுல்லா கமேனிக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக இதனை அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று ஒரு நேர்காணலில் பேசிய டிரம்ப், “இந்த ஒப்பந்தத்திற்கு ஈரான் ஒப்புக்கொள்ளாவிட்டால் அவர்கள் மீது குண்டுவீச்சு நடத்தப்படும். இதுவரை அவர்கள் பார்த்திராத வகையில் இந்தத் தாக்குதல் இருக்கும்.

4 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் மீது வரி விதித்ததைப் போல மீண்டும் இரண்டாம் தர வரிகள் விதிக்கப்படும்” என்று எச்சரித்திருந்தார்.

ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் பேசியபோது, “நாங்கள் பேச்சுவார்த்தையை நிராகரிக்கவில்லை. அமெரிக்கா வாக்குறுதிகளை மீறியதே எங்களுக்கு பிரச்னையை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் அந்த நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஈரான் தனது ஏவுகணைகளைத் தயார் நிலையில் நிறுத்தி வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. சமீபத்தில் அவர்கள் பாதாள அறையில் ஏவுகணைகளை வைத்திருக்கும் விடியோவை வெளியிட்டிருந்தனர். ஏவுகணை நகரம் என்று அழைக்கப்படும் அந்த இடம் ஆயுதக் கிடங்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், அங்கு தரையில் இஸ்ரேலியக் கொடி வரையப்பட்டு வீரர்கள் அதன்மேல் நிற்பதைப் போல காட்சிகள் வெளியாகின.

இந்த நிலையில், ஈரான் முழுவதும் சுரங்கப் பகுதிகளில் ஏவுகணைகளை தாக்குதல் நடத்துவதற்கு தயாராக வைத்திருப்பதாகச் செய்திகள் வெளியானது உலக அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதைத் தடுக்கும் விதமாக புதிய ஒப்பந்தத்தைக் கொண்டுவருவதற்கு பேச்சுவார்த்தை நடத்த டொனால்டு ட்ரம்ப் வலியுறுத்தி, ஈரானுக்கு கடிதம் எழுதியிருந்தார் டொனால்ட் ட்ரம்ப்.

iran threatens on america allies and bases ட்ரம்பின் இந்தக் கடிதத்திற்கு பதிலளித்திருந்த ஈரான் அரசு, “அமெரிக்கா உத்தரவுகளை வழங்குவதையும் அச்சுறுத்தல்களை விடுப்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்” என பதிலடி கொடுத்திருந்தார்.

இதன்மூலம் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் உறுதியாக உள்ளது. அதுமட்டுமின்றி, அணு ஆயுதம் தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை என்பதை தெளிவுப்படுத்தி உள்ளது. என்றாலும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இதுதொடர்பாக இரண்டு மாத கால அவகாசம் அளித்திருப்பதாகவும், பேச்சுவார்த்தையை மறுத்தால் கடுமையான தடைகள் மற்றும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் எச்சரித்திருந்தார்.

இதற்கிடையே, சமீபத்தில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சுரங்கத்தில், நூற்றுக்கணக்கான நவீன ரக ஏவுகணைகளை, ராணுவம் சேமித்து வைத்துள்ள வீடியோவை ஈரான் அரசு வெளியிட்டிருந்தது. ‘ஏவுகணை நகரம்’ தொடர்பான 85 வினாடிகள் ஒளிபரப்பாகும் அந்த வீடியோவில், அந்நாட்டின் ராணுவ பலத்தைக் காட்டுவதாக அமைந்திருந்தது.

iran releases missile city video underground weapon இந்த நிலையில், ”ஈரான் மீது இராணுவ நடவடிக்கை என்ற எச்சரிக்கையை அமெரிக்கா பின்பற்றினால், ஈரான் அப்பகுதியில் உள்ள அமெரிக்க தளங்களைத் தாக்கும்” என அந்த நாட்டின் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது கலிபாஃப் தெரிவித்துள்ளார். மேலும் அவர், “ஈரானின் புனிதத்தை அமெரிக்கா அழிக்க முயன்றால், பிராந்தியம் முழுவதும் வெடிமருந்துக் கிடங்கில் ஒரு தீப்பொறி போல வெடித்துச் சிதறும். அவர்களின் இராணுவ தளங்களும், அவர்களின் கூட்டாளிகளின் தளங்களும் பாதுகாப்பாக இருக்காது” என எச்சரித்துள்ளார்.

முன்னதாக வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்கி, ”அமெரிக்கா தனது அதிகபட்ச அழுத்தமளிப்பது என்ற கொள்கையை மாற்றாவிட்டால் பேச்சுவார்த்தை சாத்தியமல்ல. ட்ரம்பின் கடிதத்தை ஈரான் முழுமையாக ஆராய்ந்து, ஓமன் வழியாக பொருத்தமான பதிலை அனுப்பியுள்ளது” எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் அணு ஆயுதங்களை உருவாக்க முயற்சிக்கவில்லை என்று ஈரான் கூறுகிறது. ஆனால் பல்வேறு நாடுகளும் உலகளாவிய அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி ஏஜென்சியும் (IAEA) இதில் உறுதியாக இல்லை. அதாவது 2002 ம் ஆண்டில் இருந்தே சர்வதேச அணு ஆயுத கண்காணிப்பு ஆணையம் ஈரானுக்கு எதிரான நிலையை தக்க வைத்துக் கொண்டு வருகிறது. 2002 ஆம் ஆண்டு இரானில் ரகசிய அணுசக்தி நிலையங்கள் இருப்பது கண்டறியப்பட்டபோது, அந்நாட்டின் நோக்கங்கள் குறித்த சந்தேகங்கள் எழுந்தன. இதன் மூலம் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை (NPT) இரான் மீறியது. இந்த ஒப்பந்தத்தில் இரான் உள்பட பல உலக நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.இந்த அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் மூலம் உலக நாடுகள் மருத்துவம், விவசாயம் மற்றும் எரிசக்தி போன்ற ராணுவம் அல்லாத தேவைக்காக அணுசக்தி தொழில் நுட்பத்தை பயன்படுத்த அனுமதிக்கிறது. ஆனால், இந்த ஒப்பந்தம் அணு ஆயுதங்களை உருவாக்குவதை அனுமதிக்காது. அதே சமயம் ஈரான் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன ஆயுத கண்டு பிடிப்புகளில் முன்னணி நாடாக விளங்குகின்றது. ஈரான் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் புதிய வடிவமைப்பு ஆகியவை முழுமையாக கடந்த காலங்களில் பல்வேறு தலைவர்களை இல்லாமல் ஆக்கியது போல் ஈரானை உருக்குலைய செய்து விட வேண்டும் என்பது ஒட்டு மொத்த மேற்கத்திய நாடுகளின் திட்டமாக இருந்து வருகிறது.

2018 ஆம் ஆண்டில் கூட்டு விரிவான செயல் திட்டம் (JCPOA) என்று அழைக்கப்படும் தற்போதைய அணுசக்தி ஒப்பந்தத்தி லிருந்து அமெரிக்கா விலகியதிலிருந்து, மீண்டும் பொருளாதாரத் தடைகளை அறிமுகப்படுத்துவதற்கான முடிவிற்கு பழிவாங்கும் விதமாக இரான் முக்கிய வாக்குறுதிகளை மீறியுள்ளது.

யுரேனியத்தை செறிவூட்ட ஆயிரக்கணக்கான மே-ம்பட்ட சென்ட்ரிஃபூக்ஸ் எனப்படும் சுத்திகரிப்பு இயந்திரங்களை இரான் நிறுவியுள்ளது. இவை கூட்டு விரிவான செயல் திட்டத்தால் தடை செய்யப்பட்டவை.”அணு ஆயுதங்களுக்கு 90% தூய்மைப்படுத்தப்பட்ட யுரேனியம் தேவைப்படுகிறது.

கூட்டு விரிவான செயல் திட்டத்தின்படி, இரான் 3.67மூ வரை தூய்மைப்படுத்தப்பட்ட 300 கிலோ யுரேனியத்தை மட்டுமே வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இது பொது அணுசக்தி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்கு போதுமானது,

இந்த அளவு அணு ஆயுதங்கள் தயாரிக்க போதுமானதல்ல.ஆனால் தற்போதுள்ள நிலையில் ஈரான் அணு ஆயுத உற்பத்தி திறன் சார்ந்த உருவாக்கத்தில் இறுதி கட்ட நிலையை தற்போது அடைந்து உளளதாகவே உலகில் பல்வேறு நாடுகள் உறுதி செய்து உள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.ஆனால் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இரானிடம் சுமார் 275 கிலோகிராம் யுரேனியத்தை 60% தூய்மைக்கு செறிவூட்டியுள்ளதாக சர்வதேச அணுசக்தி ஏஜென்சி தெரிவித்தது. இரான் இன்னும் அதிகமாக யுரேனியத்தை செறிவூட்டினால், கோட்பாட்டளவில் சுமார் அரை டஜன் ஆயுதங்களை உருவாக்க இது போதுமானது .

2010 ஆம் ஆண்டு முதல் இரான் தனது அணுசக்தி திட்டத்தை ஒரு அணுகுண்டை உருவாக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்துவதாக சந்தேகித்ததால், அந்நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன.அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளை பொருத்தவரை லிபியா அணு ஆயுதங்களை அழித்தன் மூலம் அந்த நாட்டை காலி செய்த அதே நிலை தத்துவத்தை தான் இன்று ஈரான் மீது உபயோகிக்க அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் முயற்சி செய்து வருகின்றன.இந்த பொருளாதார தடைகளால் இரான் சர்வதேச சந்தைகளில் எண்ணெய் விற்பனை செய்வது நின்றது. அத்துடன் அந்நாட்டின் 100 பில்லியன் டாலர் வெளிநாட்டு சொத்துகள் முடங்கி போயின. இதனால் இரான் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியை சந்தித்தது. இரான் நாணயத்தின் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு சரிந்தது, இது பணவீக்கம் அதிகரிக்க வழிவகுத்தது.2015 ஆம் ஆண்டில் இரான் மற்றும் உலகின் ஆறு வல்லரசு நாடுகள் (அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பிரிட்டன்) பல வருட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு கூட்டு விரிவான செயல் திட்டம் (JCPOA) எனப்படும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. இரானின் அணுசக்தி திட்டத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன், சர்வதேச அணுசக்தி ஏஜென்சிக்கு இரானின் அனைத்து அணுசக்தி நிலையங்களை அணுகவும், சந்தேகத்திற்குரிய இடங்களை ஆய்வு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது.இதற்குப் பதிலாக, இரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்க ஒப்புக்கொண்டன. இந்த கூட்டு விரிவான செயல் திட்டம் உடன்படிக்கை 15 ஆண்டுகள் வரை நீடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டது, அதன் பிறகு இந்த கட்டுப்பாடுகள் காலாவதியாகிவிடும். அதேநேரத்தில் 2018 ஆம் ஆண்டு டொனால்ட் டிரம்ப் பதவியேற்றபோது, ஒப்பந்தத்தின் முக்கிய தூணாக இருந்த அமெரிக்காவை ஒப்பந்தத்திலிருந்து விலக்கினார்.அவர் இந்த ஒப்பந்தத்தை மோசமான ஒன்று என்று கூறினார். ஏனெனில் அது நிரந்தரமானது அல்ல, மேலும் இரானின் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டம் உள்ளிட்ட பிற விஷயங்களை அது கருத்தில் கொள்ளவில்லை.புதிய மற்றும் விரிவான ஒப்பந்தத்திற்கு பேச்சுவார்த்தை நடத்த இரானை கட்டாயப்படுத்தும் “அதிகபட்ச அழுத்த” பிரசாரத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கத் தடைகளை டிரம்ப் மீண்டும் விதித்தார்.இஸ்ரேல் போன்ற அமெரிக்காவின் நட்பு நாடுகள் இந்த ஒப்பந்தத்தை விரும்பவில்லை, அதனால் டிரம்ப் இரான் அணுசக்தி ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.இரான் ரகசிய ஆயுதத் திட்டத்தை இன்னும் தொடர்கிறது என்றும், பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டதன் மூலம் கிடைக்கும் பில்லியன் கணக்கான டாலர்களை இரான் தனது ராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்த பயன்படுத்தும் என்றும் இஸ்ரேல் எச்சரித்தது.எனவேதான் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் அரசு தலைமை எடுக்கும் எல்லா வித மக்கள் விரோத நடவடிக்கைகளையும் அமெரிக்கா ஆதரிப்பதற்கு மிகவும் முக்கியமான காரணம் இந்த பிராந்தியத்தில் ஈரான் தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்து விட கூடாது என்பதில் தான் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டுவதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது இரானுடனான பேச்சுவார்த்தைகள் குறித்த டிரம்பின் அறிவிப்பு இஸ்ரேலை ஆச்சரியப்படுத்தியது. கூட்டு விரிவான செயல் திட்டத்தை விட “சிறந்த” ஒப்பந்தத்தை மேற்கொள்ளப் போவதாக அவர் நீண்ட காலமாக கூறி வந்தார். இருப்பினும் இதுவரை இரான் ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதை நிராகரித்துள்ளது.இரான் ஒரு புதிய ஒப்பந்தத்திற்கு உடன்படியவில்லை என்றால் அந்நாட்டின் மீது குண்டு வீசப்படும் என்று டிரம்ப் முன்னர் எச்சரித்திருந்தார். இது சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தியது.ஈரான் மற்றும் அமெரிக்க இடையே நடைபெறும் பேச்சுவார்த்தை குறித்தான முடிவுகள் குறித்து தான் உலகம் தற்போது மிகுந்த அக்கறை காட்டுவதன் பின்னணி இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.இரானின் அணுசக்தி திட்டத்தை “முழுமையாகக் கலைக்க” டிரம்ப் விரும்புவதாக அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ் கூறியுள்ளார். இரானின் அணு செறிவூட்டல் என்பதை ஆயுதமயமாக்கல் மற்றும் மூலோபாய ஏவுகணைத் திட்டம் என்று கருத வேண்டும் என அவர் குறிப்பிட்டார். ஆனால் இதற்கு சாத்தியம் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஆனாலும் அமெரிக்கா அதிக அழுத்தம் என்கிற பாலிசி மூலம் ஈரான் அரசை வழிக்கு கொண்டு வர பல்வேறு வகையான நிலையில் முயற்சி செய்து வருவதன் மிக முக்கியமான நோக்கம் இதுவாக தான் இருக்கிறது. டொனால்ட் டிரம்ப் “நேரடி பேச்சுவார்த்தைகள்” நடைபெறும் என்று கூறியிருந்தாலும், இரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஷி ஓமனில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் மறைமுகமாகவே இருக்கும் என்று கூறினார். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த இரான் தயாராக இருப்பதாகவும், ஆனால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படாது என்பதை டிரம்ப் முதலில் உறுதியளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். ஈரான் எந்தவொரு நிலையிலும் அமெரிக்கா வுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த முன்வராததால் இது அமெரிக்காவுக்கு மிகுந்த ஏமாற்றத்தை தான் ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது. டிரம்பின் அறிவிப்புக்குப் பிறகு, இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இரான் தனது அணு ஆயுதத் திட்டத்தை முழுமையாகக் கைவிடும் ஒப்பந்தம் மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று கூறினார். ”நாங்கள் உள்ளே நுழைந்து, அமெரிக்காவின் மேற்பார்வை மற்றும் செயல்பாட்டின் கீழ், அணு உலைகளை வெடித்து, அனைத்து உபகரணங்க ளையும் அழிப்போம்”, என்றும் அவர் குறிப்பிட்டார். இஸ்ரேலின் மிகப்பெரிய அச்சம் என்னவென்றால், டிரம்ப் இரான் முழுமையாக சரணடைவதற்கு குறைவான ஒரு சமரசத்தை ஏற்றுக்கொண்டு, அதை ஒரு இராஜதந்திர வெற்றியாக முன்வைக்கக்கூடும்.அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (ரே்வு) கையெழுத்திடாத இஸ்ரேல், அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக கருதப்படுகிறது. இதனை இஸ்ரேல் உறுதிப் படுத்தவும் இல்லை, மறுக்கவும் இல்லை.இஸ்ரேலின் இருப்பை ஏற்றுக்கொள்ளாத அணு ஆயுதம் வைத்திருக்கும் இரான் இஸ்ரேலுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்று இஸ்ரேல் நம்புகிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இரானின் அணுசக்தி உட்கட்டமைப்பைத் தாக்கும் ராணுவத் திறன்களை வைத்துள்ளன. ஆனால் அத்தகைய நடவடிக்கை சிக்கலானதாகவும் ஆபத்தானதாகவும் இருக்கும், நிச்சயமற்ற விளைவைக் கொண்டிருக்கும். முக்கிய அணுசக்தி தளங்கள் ஆழமாக நிலத்தடியில் புதைக்கப்பட்டுள்ளன, இவற்றை மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளால் தகர்த்து மட்டுமே அணுக முடியும். அமெரிக்கா இந்த வெடிகுண்டுகளை வைத்திருந்தாலும், இஸ்ரேலிடம் இந்த குண்டுகள் இருப்பதாக தெரியவில்லை.இரான் தன்னை நிச்சயமாக தற்காத்துக் கொள்ளும், இதில் அந்த பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க சொத்துக்களை தாக்குவதும், இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஏவுவதும் அடங்கும்.இத்தகைய நடவடிக்கைகளை சமாளிக்க, அமெரிக்கா வளைகுடாவில் உள்ள தனது தளங்களையும், விமானம் தாங்கும் போர்க் கப்பல்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.”ஆனால் கத்தார் போன்ற நாடுகளில், அமெரிக்காவின் மிகப்பெரிய விமானப்படைத் தளம் இருந்தாலும், அந் நாடுகளால் பதிலடி தாக்குதல்களுக்கு பயந்து இரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவிற்கு உதவ வராமல் போகலாம்.

அரபுகள் தற்போதைய நிலையில் குறிப்பாக சவூதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் நடவடிக்கைகள் எதற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவ போவதில்லை என்றும் தங்கள் நாட்டில் உள்ள அமெரிக்கா தளங்களை எந்தவொரு நிலையிலும் ஈரான் நாட்டிற்கு எதிராக பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்க மாட்டோம் என்று அறிவிப்பு செய்துள்ளது அமெரிக்காவின் மிகப்பெரிய அளவிலான பின்னடைவு என்பதே தற்போதைய நிலையாக உள்ளது.

# உயிர்த்த ஞாயிறு விவகாரத்தால் சூடு பிடிக்கும் தேர்தல் களம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2025 மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகி இருக்கின்ற நிலையில் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையில் தென் இலங்கையில் இருந்து தேர்தல் பிரச்சார பணிகளை ஆரம்பித்திருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியான சஜித் தலைமையிலான சமகி ஜனபலவேகய கட்சி 2025 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி கொழும்பில் நடத்திய அக்கட்சியின் தேசிய மாநாட்டின் மூலம் தேர்தல் பிரசாரப் பணிகளை ஆரம்பித்து முன்னெடுக்க இருக்கின்றது.

இந்நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் எத்தைகைய தேர்தல் பிரச்சார உத்திகளை பயன்படுத்தியதோ அதே வழியில் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும் சஜித் அணி, நாமல் அணி, திலிப் ஜயவீர அணி, ரனில் விக்கிரமசிங்கா அணி ஆகிய அணிகள் அரசாங்கம் 06 மாதங்கள் கடந்தும் இதுவரையில் நாட்டிற்கு கண்ணுக்கு தெரியும் வகையில் எதையும் செய்யவில்லை, வாக்குறுதிகளை மீறி இருக்கின்றது, பாராளுமன்றத்தில் ஒருவிதமான அடக்கு முறையை கையாண்டு எதிரணி உறுப்பினர்களை பலவந்தமாக கட்டுப்படுத்தி வருகின்றது என்ற அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எப்படியேனும் கடந்த இரண்டு தேர்தல்களிலும் இழந்த செல்வாக்கையும் சரிவடைந்த மக்கள் ஆதரவையும் அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றன. தற்போதைய நிலையில் அரசுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இந்த விடயங்களை விட்டால் தேர்தலில் மக்கள் ஆதரவை தேட வேறு வழிகள் இல்லை. பிரச்சாரத்திற்கான கருப்பொருள்களும் இல்லை.

இந்நிலையில் அமெரிக்கா ஜனாதிபதி அந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக எடுத்துள்ள சில வரி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இலங்கைக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைய இருக்கின்றன. அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான சுங்கத் தீர்வையை ஜனாதிபதி டரம்ப் எதிர்பாராத விதமாக அதிரடியாக உயர்த்தி இருக்கின்றார்.

அமெரிக்காவுக்கு உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளுக்கான வரி அதிகரிப்பு வரிசையில் இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கின்ற பொருட்களுக்கான வரியை 44% வீதம் ஆக அதிகரித்திருக்கின்றது. இவ்வாறாக 67 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான வரிகளை அதிகரிப்பதற்கான பத்திரத்தில் அமெரிக்க ஜனாதிபதி 2025.04.02 ஆம் திகதி கையொப்பம் இட்டார். அதன்படி குறிப்பிட்ட 67 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள், தயாரிப்புக்கள் மீது அதிகரிக்கப் பட்ட அளவில் சுங்கத்தீர்வை விதிக்கப்பட இருக்கின்றது.

அத்தகைய சந்தர்ப்பத்தில் அமெரிக்க சந்தைகளில் குறிப்பிட்ட நாடுகளின் உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்க நேரிடலாம்.

குறிப்பாக இலங்கையில் இருந்து 25% தைத்த ஆடைகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ்வாறான வரி அதிகரிப்பால் அந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பின்னர்



இலங்கையில் இருந்து அனுப்பப்பட்ட உற்பத்திகளின் விலைகள் அமெரிக்காவில் உள்நாட்டு சந்தைகளில் விலைகள் உயர்வடையும் போது அங்குள்ள இறக்குமதியாளர்கள் இலங்கையில் இருந்து இத்தகைய உற்பத்திகளை அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்ய பின்வாங்கும் நிலை ஏற்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது இலங்கையின் பொருளாதாரத்தை மிக மோசமாக பாதிக்கச் செய்யலாம்.

இலங்கையில் ஆடைக் கைத்தொழில் துறையில் சுமார் 03 இலட்சம் பேர்கள் அளவில் நேரடியாகவும் 10 இலட்சம் பேர்கள் அளவில் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பை பெற்றுள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. 2023 - 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளின் மொத்த பெறுமதி அண்ணளவாக 01 இலட்சம் கோடி ரூபா அளவில் என்றும் அதன் மூலம் பெறப்பட்ட அந்நிய செலாவணி வருமானம் 35000 கோடி ரூபா அளவிலானது என்றும் அறிக்கைகள் கூறுகின்றன. எவ்வாறாயினும் அமெரிக்க ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கையை ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன. சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் உடன்படிக்கைக்கு மாற்றமான முறையில் அமெரிக்கா நடந்து கொண்டி ருக்கின்றது என்று கண்டித்துள்ளன. அமெரிக்கா அதன் நேச நாடுகளுடன் இணக்கப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். அதன் நட்பு நாடுகளாக இருந்து கொண்டு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளை கைகொடுத்து எழுப்பி விட வேண்டிய நிலையில் இவ்வாறான நெருக்கடிகளை தோற்றுவிக்கும் விதமான நடந்துகொண்டிருப்பது வெறுக்கத்தக்க செயல் என்று ட்ரம்பின் போக்கை அதிகமான நாடுகள் கண்டித்துள்ளன.

அதே நேரம் அமெரிக்க ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கையானது இலங்கை அரசியலிலும் பலமான அதிர்வலைகளை உருவாக்கி வருகின்றன. அரசாங்கத்தின் எதிரி உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மம்பிள்ளை, பாடலி சம்பிக ரணவக ஆகியோர் அரசாங்கத்தை கண்டித்திருக்கின்றனர். ஏற்கனவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக இந்த விடயத்தை தெரிந்திருந்தும் அமெரிக்காவுடன் சுமுகமான நல்லுறவின் அடிப்படையில் இந்த சுங்கத்தீர்வை அதிகரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டி இருக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவிக்கையில் இந்த விடயம் தொடர்பாக ஒரு மாத காலத்திற்கு முன்னரே அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியதாகவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டதாகவும் ஜனாதிபதியின் போக்கை விமர்சித்திருக்கின்றார்.

இவ்வாறாக இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு பாரிய சவால் ஏற்பட்டால் அதனால் இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரம் பாதிப்படையலாம், ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையும் போது அமெரிக்க டாலருக்கான பற்றாக்குறை மீண்டும் ஏற்படலாம். அவ்வாறே இலங்கை மத்திய வங்கியில் இருக்க வேண்டிய சிறப்பெடுப்பு ஒதுக்கு வீழ்ச்சியடைந்தால் 2021 - 2024 காலப்பகுதியில் ஏற்பட்டது போன்ற பொருளாதார நெருக்கடி ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அதே நேரம் அமெரிக்காவில் இருந்து இலங்கை இறக்குமதி செய்கின்ற உற்பத்திகளுக்கான வரிகளையும் அதிகரிக்கலாம் என்று பொருளியல் வல்லுனர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

எந்தவொரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் தமது நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தவும் பொருளாதார ஸ்தீர நிலையை பாதுகாக்கவும் இவ்வாறான சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்காரவை பொருளாதார ரீதியாக பலப்படுத்தி செல்வந்த நாடாக்கும் அமெரிக்க மீட்சி திட்டம் என்ற அடிப்படையில் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என்பதை அவர் பகிரங்கமாக தெரிவிக்கின்றார்.

இதே போன்றுதான் இலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட போது 2022 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய பின்னர் பதவி ஏற்ற புதிய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவும் சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். அதில் உள்நாட்டிற்கு அத்தியாவசிய தேவையாக இருந்த சில பொருட்களின் இறக்குமதிகள் மீது வரிகளை அதிகரித்தார். வாகன இறக்குமதியை நிறுத்தினார். ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படுகின்ற பதிவு செய்யப்படாத புதிய வாகனங்களுக்கு 200 வீத வரி அறவிடப்பட்டு வருகின்றது. நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு அதிகரித்து விலை உயர்வடைந்தி ருந்த நிலையில் அரிசி இறக்குமதி வரியைக் கூட அரசாங்கம் அதிகரித்தமையை நாம் மறந்து விட முடியாது. அத்துடன் அமெரிக்காவின் இத்தகைய செயலை கண்டித்துள்ள சோவியத் ரஷ்யா இலங்கைக்கு உதவிக்கரம் நீட்ட தயாராக இருப்பதாக இலங்கைக்கான சோவியத் ரஷ்ய தூதுவர் அறிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆறுதல் சொல்லி இருக்கின்றது.

எதுவானாலும் அமெரிக்காவை முன்மாதிரியாக பின்பற்றி ஐரோப்பிய யூனியன் நாடுகளும் இவ்வாறான வரி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்து இலங்கையில் இருந்து அந்நாடுகள் இறக்குமதி செய்கின்ற பொருட்களுக்கான வரிகளை அதிகரித்தால் அதனால் இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடி யில் இருக்கின்ற நாடுகள் மிக மோசமான பாதிப்புக்களை சந்திக்கலாம்.

இந்நிலையில் ஜனாதிபதி முக்கியமான பொருளியல் துறை உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய விஷேட குழுவொன்றை நியமித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு அவர்களை பணித்துள்ளார்.

எதுவானாலும் அரசாங்கம் எதிர்காலத்தில் இத்தகைய பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தையும் செல்வாக்கையும் ஏற்படுத்தவல்ல துறைகள் தொடர்பாக மேலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். அமெரிக்கா உள்ளிட்ட இலங்கையின் பிரதான இறக்குமதி நாடுகளுடன் இருதரப்பு நல்லுறவை தொடர்ச்சியாக பலப்படுத்தும் வகையில் சிறந்த நிபுணத்துவ அணுகுமுறைகளை கடைபிடிக்க வேண்டிய காலத்தின் தேவையாகும். ஏனெனில் தைத்த ஆடைகள் மாத்திரமன்றி இலங்கையின் தேயிலை ஐரோப்பிய நாடுகளின் இறக்குமதியில் பிரதான இடம் வகிக்கின்றது. இலங்கைக்கு ஆகக் கூடுதலான அந்நிய செலாவணியை தரக்கூடிய துறைகளாகும். அதனால் இந்த விடயத்தை அரசியலுக்கு அப்பால் இருந்து இலங்கையின் பொருளாதார ஸ்தீரத்தன்மை என்ற அடிப்படை யில் தூர நோக்குடன் பார்க்க வேண்டும்.

இருந்தாலும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் கடந்த வாரம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவை சந்தித்து இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி உள்ளனர். அமெரிக்காவுடன் கதைத்து பேசி இயலுமான அடிப்படையில் இந்த சுங்க வரி அதிகரிப்பை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்க இணங்கி உள்ளனர். அதேநேரம் டரம்ப் இந்த வரிவிதிப்பை சற்று பின்தள்ளி 03 மாதங்களுக்கு ஒத்திவைத் திருப்பதாகவும் அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் அரசாங்கம் ஏப்ரில் தாக்குதல் விடயம் தொடர்பாகவும் இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் அதன் பிரதான சூத்திரதாரி யார் என்பதை வெளியிடவும் சூத்திரதாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக வழங்கி இருக்கின்ற வாக்குறுதிகள் தொடர்பாக பேராயர் ரஞ்சித் மெல்கம் மீண்டும் ஜனாதிபதியை வலியுறுத்தி இருக்கின்றார்.

அதனால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒருவகையில் அரசுக்கு சவால் மிக்கதாக அமைய இருக்கின்றது. அரசு வெளிப்படுத்த இருப்பது ஏற்கனவே சூத்திரதாரிகள் என்று கைது செய்து வழக்கு தாக்கல் செய்ய போதிய ஆதாரங்கள் இல்லை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டவர்களையா? அல்லது புதிதாக புலனாய்வு செய்து போதுமான ஆதாரங்களுடன் கண்டறியப்பட்ட சூத்திரதாரிகளையா? என்பதை அறிய மக்கள் அனைவரும் ஆவலாக இருக்கின்றனர்.

அவ்வாறு வெளிப்படுத்தப்படும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் உண்மையகவே தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட வர்களாக இருந்தால் அது அரசாங்கத்தின் இருப்புக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமையலாம். அல்லது ஞானசார தேரர் அடிக்கடி சொல்வது போன்ற சூத்திரதாரியாக இருந்தால் பேராயரின் அதிருப்திக்கும் விமர்சனத்திற்கும் ஆளாக நேரிடலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

# கஹட்டோவிட்டவில் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்த ஹிஸ்புல்லா எம்.பீ.




எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச சபைக்கு ஐக்கிய தேசிய கூட்டணியின் தராசு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் சந்திப்பும், தேர்தல் பிரச்சார அலுவலகங்களின் திறப்பு விழாவும் கஹட்டடோ விட்ட மற்றும் ஒகொடபொல பிரதேசங்களில் (09) நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

இதன்போது, ஐக்கிய தேசிய கூட்டணியின் கஹட்டோவிட்ட வட்டார வேட்பாளர் அல்ஹாஜ் பிர்தௌஸ், ஏனைய வட்டார மற்றும் பட்டியல் வேட்பாளர்களான ரிசான், ரி-ப்கான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நாஸர், நஸீர், ரம்ஸான், முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் அல்ஹாஜ் ஜவ்ஸி, முன்னாள் மேல் மாகாண சபை வேட்பாளர் அல்ஹாஜ் முஸ்தாக் மதனி, மீரிகம தேர்தல் தொகுதி அமைப்பாளர் ஆதிக் உட்பட பல்வேறு கட்சிகளினதும் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை ஜமாஅத் அல் ஹிக்மாவில் ஐந்து நாள் பயிற்சி நெறி





இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி உக்குவளை கிளையின் ஏற்பாட்டில் க.பொ.த.சாதாரனதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு "இஸ்லாமிய நெறிமுறையில் வாழ்க்கையைத் திட்டமிட்டு சிறப்பாக அமைத்துக்கொள்வோம்" எனும் தொனிப்பொருளில் ஐந்து நாட்கள் பயிற்சி நெறி உக்குவளை ஜமாஅத் அல்ஹிக்மா பயிற்சி மன்றத்தில் நடைபெற்றன.

இப்பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றுகள் வழங்கிவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது இதன்போது முஸ்லிம் பாடசாலைகளுக்கான பிரதி கல்விப் பணிப்பாளர் எம். உனைஸ் உட்பட பிரதேச முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் பெற்றோரும் சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆறு மாத காலத்துக்குள் வாக்களித்த மக்களுக்கு கிடைத்த ஏமாற்றம்

## றிஷாத் பதியுதீன் ஆதங்கம்





மாற்றத்தை வேண்டி தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள் 06 மாத காலத்துக்குள் பெருத்த ஏமாற்றத்தை சந்தித்துள்ளார்கள் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், வர்த்தக மற்றும் கைத்தொழில் துறை முன்னாள் அமைச்சருமான றிசாத் பதியுதீன் நிந்தவூரில் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபைக்கு போட்டியிடுகின்ற மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம் செய்கின்ற கன்னி பிரசார ஆதரவு கூட்டம் கடந்த திங்கட்கிழமை (14) இரவு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் 75 வருட கால தவறை திருத்துங்கள் என்கிற கோஷத்துடன் வந்த தேசிய மக்கள் சக்திக்கு மாற்றத்தை வேண்டி மக்கள் திரண்டு வாக்களித்தார்கள். ஆனால் 06 மாத காலத்துக்குள் பெருத்த ஏமாற்றத்தை அடைந்து விட்டார்கள்.

எம்மவர்களும் வாக்களித்து விட்டு ஏன் இந்த தவறை செய்தோம்? என்று இன்று ஏங்கி கொண்டிருக்கின்றனர். ஏனென்றால் இந்த 06 மாத காலத்துக்குள்ளேயே எவ்வளவோ இனவாத போக்கோடு அரசாங்கம் நடந்து கொண்டிருக்கின்றது.

பழைய கோத்தாபய அரசாங்கம் இனவாதத்தை நேரடியாக கக்கியது. நமது சமூகத்தை நேரடியாக பழி வாங்கியது அவர்களுக்கு கிடைத்திருந்த வெற்றி பயன் அற்று போய் விட்டது கண்கூடு.

நிந்தவூர் பிரதேச சபை இந்நாட்டுக்கே முன்மாதிரியான பிரதேச சபை. எல்லா வகையிலும் முதன்மையான பிரதேச சபை. இதன் தவிசாளராக இருந்து நாடளாவிய ரீதியில் இதை முதலாவது பிரதேச சபையாக கொண்டு வந்தவர் தற்போதைய எமது எம். பி அஷ்ரப் தாஹீர். அவர் விட்டு சென்ற இடத்தில் இருந்து தொடர்ந்து சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ/க்கு எந்த நிபந்தனையும் இல்லாமல் நிந்தவூர் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சபையாக நிந்தவூர் பிரதேச சபையை தந்து அபிவிருத்திகளை பெற வேண்டும் என கூறினார்.

# சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள்




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வு சமூர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் அண்மையில் (11) இடம்பெற்றது.

இந் நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சாய்ந்தமருதில் உள்ள 17 பிரிவுகளின் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கி வைத்தார். சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் மற்றும் சமூர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சமூர்த்தி வங்கிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் இவ்வாண்டின் (2025) முதலாவதாக அம்பாறை மாவட்டத்திலேயே அதிலும் சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கே வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிட்டத்தக்கது.

# 7வது ஆண்டு பட்டமளிப்பு விழா மற்றும் ருமு இன் Gatehouse விருதுகள் இலங்கையில்







இலங்கையில் Gatehouse விருதுகள் (UK) இன் 7வது ஆண்டு பட்டமளிப்பு விழா அண்மையில் (12) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

UK இன் Gatehouse விருதின் இலங்கை இயக்குனரும் உஉயள கல்லூரியின் நிறுவுனருமாகிய நஜிமுதீன் சைனுலாப்தீன் நிகழ்வை ஏற்பாடு செய்து தலைமை தாங்கியிருந்தார்.

இன் நிகழ்வில் நாடு முழுவதிலும் உள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வி,செவிலியர், தகவல் தொழில்நுட்பம், வணிக மேலாண்மை, ஆசிரியர் பயிற்சி, அளவு கணக்கெடுப்பு, சிவில் பொறியியல், பராமரிப்பு என பல துறை சார்ந்து கல்வி பயின்ற மாணவர்கள் சுமார் 500 மேற்பட்டவர்கள் பட்டங்கள் பெற்றனர்.

பிரதம விருந்தினராக மாலத்தீவு குடியரசைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் மூத்த கல்வியாளர்,டாக்டர் மஹ்தி ஷாஹித், கலந்துகொண்டார்.

தலைமை விருந்தினராக மாத்தறை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் நலின் ஜெயமினி, மலேசியாவின் உயர் ஸ்தானிகர் முகமது டுமிங் கௌரவ விருந்தினர்களாக டாக்டர் முகமது ரபிக் (இந்தியா), தொழில் ஆலோசனை நிபுணர் சன்ஃபோ குளோபலின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் சர் தேசப்பிரியா எஸ். விஜேதுங்கே ஆகியோரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களுக்கான துணை இயக்குநர் யாகூப் உமர்லெப்பே மற்றும் ஜேஜே அறக்கட்டளையின் இயக்குநர் டாக்டர் ஐ .வை.எம் . ஹனிஃப் போன்றவர்கள் சிறப்பு விருந்தினர்களுடன் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக வானொலி பெட்டி

## அடித்து கூறுகிறார் தலைமை வேட்பாளர் நஸார்





**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கின்ற சக்தியாக வானொலி பெட்டி விளங்கும் என்று வருகின்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் இப்பிரதேச சபைக்கு வானொலி பெட்டி சின்னத்தில் போட்டியிடுகிற சுயேச்சை குழு - 03 இன் தலைமை வேட்பாளர் சமூக சேவையாளர் எஸ். எல். ஏ. நஸார் தெரிவித்தார்.

இச்சுயேச்சை குழுவின் தேர்தல் அலுவலக திறப்பு விழா ஞாயிற்றுக் கிழமை (13) இரவு சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

சமய அனுஷ்டானங்களை தொடர்ந்து வேட்பாளர்கள் அறிமுகம் இடம்பெற்றது.

தொடர்ந்து இச்சுயேச்சை குழுவின் பிரசார பீரங்கியும், சமூக, பொதுநல, அரசியல், ஊடக செயற்பாட்டாளரு மான அஹமட் புர்கான் சிறப்புரை மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து சுயேச்சை குழு தலைவரும், தலைமை வேட்பாளருமான நஸார் உரையாற்றும் போது சம்மாந்துறை மண்ணும், மக்களும் இன்று ஏதிலிகளாக உள்ளார்கள். காரணம் கடந்த 30 வருடங்களாக காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்கள் எமது மண்ணையும், மக்களையும் தொடர்ந்தேச்சையாக ஏமாற்றி வந்துள்ளார்கள். இனியும் ஏமாற்ற காத்திருக்கின்றார்கள்.

எமது மண் மாட்சி பெற வேண்டும். எமது மக்கள் மீட்சி பெற வேண்டும். அதற்கு காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்களின் சூழ்ச்சிகளில் இருந்து விடுபட வேண்டி உள்ளது. ஆகவேதான் எமது மண்ணையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்கிற சமூக நோக்கத்தை முன்னிறுத்தி பிரதேச சபைக்கு சுயேச்சையாக போட்டியிடுகின்றோம்.

சம்மாந்துறை தொகுதி மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய கூடிய அளவுக்கு வாக்கு வலிமையை கொண்டது. ஆனால் சம்மாந்துறை தொகுதிக்கு அண்மைய காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்ச்சியாக கிடைப்பதாக இல்லை.

ஆனால் எமது மக்களின் வாக்குகளை வைத்து வேறு தொகுதிகளை சேர்ந்தவர்கள் எம். பிகளாக வருகின்றனர். அவர்கள் எமது மண்ணையும், மக்களையும் கண்டு கொள்வதே இல்லை. இந்த நிலை மாற வேண்டும். மாற்றம் ஒன்றே முன்னேற்றத்துக்கான வழி.

அந்த அரசியல்வாதிகள்தான் நாம் இன்று தேர்தல் கேட்பதற்கான காரணம் ஆவர். சம்மாந்துறை பிரதேச சபையில் இருந்து மாற்றம் உருவாக வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கிற சக்தியாக வானொலி பெட்டி விளங்கும் என தெரிவித்தார்.

# களுத்துறை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸிடம் ஒப்படைக்க மக்கள் ஓரணி திரண்டுள்ளனர்

## மேயர் வேட்பாளர் ஆமிர் நஸீர்

**(பேருவளை பி.எம் முக்தார்)**

களுத்துறை மாநகரசபையின் ஆட்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் ஒப்படைக்க பிரதேச வாழ் மக்கள் சகல வேற்றுமைகளையும் மறந்து இன்று ஓரணியில் ஒன்று திரய்டுள்ளதாக மாநகரசபை தலைமை வேட்பாளர் முன்னாள் நகர பிதா ஆமிர் நஸீர் கூறினார்.

களுத்துறை ஹீனட்டியன் கல பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உறையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். நஸீர் ஹாஜியார் உட்பட பல வேட்பாளர்கள் உரையாற்றிய இக்கூட்டத்தில் பெருமளவிலா னோர் கலந்து கொண்டனர்.



ஆமிர் நஸீர் மேலும் கூறியதாவது, களுத்துறை மாநகரசபை மேயர் பதவியை பெற்றுக்கொள்ள நல்லதொரு சந்தர்ப்பம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக களுத்துறை வாழ் மக்களுக்கு கிடைத்துள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இத் தேர்தலில் எனது தலைமையில் தலைசிறந்த மக்கள் ஆதரவு உள்ள குழுவொன்று களமிறங்கியுள்ளது. நாளுக்கு நாள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கான மக்கள் ஆதரவு பெருகிவருகிறது.

எனது தலைமையில் ஆட்சி அமைய வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் விருப்பமாகும். மூவின மக்களினது ஆதரவு எமக்குள்ளது. களுத்துறை மாநகர சபை பகுதியில் உள்ள கூடுதலான வட்டாரங்களை கைப்பற்றி ஆட்சியமைப்போம்.

எமது வெற்றி அநீதிக்கு எதிரான வெற்றியாகும். அதை நன்கு புரிந்து கொண்ட களுத்துறை வாழ் மக்கள் எம்மோடு கை கோர்த்துள்ளனர்.

களுத்துறை மாநகர சபையை தேசிய மக்கள் சக்தியாலோ, ஐக்கிய மக்கள் சக்தியாலோ வேறு குழுக்களினாலோ இலகுவாக வெற்றிகொள்ள முடியாது.

எனது தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ/க்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதனால் இந்த இரு கட்சிகளும் எம்மை வீழ்த்த சதி முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இந்த சதி முயற்சிகளை மே 6ம் திகதி மக்கள் முறியடிப்பார்கள்.

களுத்துறை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றுவதன் மூலம் இப் பகுதி வாழ் சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்கு இன, மத, மொழி, கட்சி மற்றும் பிரதேச வேறுபாடுகளின்றி சேவைகளைப் பெற்றுக்கொடுப்போம்.

களுத்துறை நகர சபை தலைவராக பதவி வகித்து அப்பதவி மூலம் பாரிய பணிகளை மக்களுக்குச் செய்துள்ளேன். நீதியானதும், தூய்மையானதுமான எனது சேவையை மக்கள் விரும்புகின்றனர். அதைனாலேயே இத்தேர்தலிலும் மக்கள் என்னுடன் கைகோர்த்துள்ளனர். நான் மக்களுடனே என்றும் இருப்பவன்.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியாலோ, தேசிய மக்கள் சக்தியாலோ நிச்சயமாக வெற்றிகொள்ள முடியாது என்பதை மக்கள் நன்கு புரிந்துள்ளனர்.

இந்த மாநகர சபபையின் மேயர் பதவியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே உங்கள் வாக்குகளை வீணாக்கிவிடாது புத்திசாலித்தன மாக நடந்து எமக்கு வழங்கி கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முயலுங்கள் என்றார்.

# உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தியிடம் ஒப்படையுங்கள்

## தேசிய மக்கள் சக்தி தலைமை வேட்பாளர் முஹம்மத் மபாஸின்

**(பீ.எம் முக்தார்)**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வெற்றிகரமாக முன்னெடுக்க நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் நகர பிரதேச சபைகளின் அதிகாரங்களை நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தியிடமே ஒப்படைக்க வேண்டும் என பேருவளை நகர சபை தேசிய மக்கள் சக்தி தலைமை வேட்பாளர் முஹம்மத் மபாஸின் கூறினார்.

பேருவளை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, கிராமங்களையும், நகரங்களையும் சிறந்த திட்டங்களுடன் அபிவிருத்தி செய்து மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை பெற்றுக் கொடுப்பதே ஜனாதிபதியினதும், அரசினதும் இலக்கமாகும்.

ஊழல், லஞ்சம், வீண் விரயம், அதிகார துஷ்பிரயோகம் இன்றி தூய்மையானதும் நேர்மையானதுமான அரசியல் பணிகளை தேசிய மக்கள் சக்தி இன்று மேற்கொண்டுள்ளது. இதையே மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

பேருவளை நகர சபை பகுதியை கட்டியெழுப்ப வேண்டும். இந்த உள்ளூராட்சி சபையை பல கட்சிகளும், சுயேற்சை அணிக-ளும் மாறி மாறி ஆட்சி செய்த போதிலும் இந்த நகரம் இன்னும்



முழுமையாக அபிவிருத்தி யடையவில்லை. இந்த நிலை தொடர இடமளிக்கக் கூடாது.

பேருவளை மக்கள் இம்முறை தேர்தலில் மாற்றமொன்றை ஏற்படுத்த எம்மோடு கைகோர்த்துள்ளனர். இது மகிழ்ச்சிக்குறியதாகும்.

பேருவளை நகர சபையையும், பிரதேச சபையையும் இத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த வெற்றி ஒரு சாதாரண வெற்றியன்றி வரலாறு காணாத வெற்றியாக அமைய வேண்டும். அதற்காக நாம் அணி திரள்வோம்

## மனநலமும் ஆலோசனையும் 76

# முதுமை

அன்பர்களே! நண்பர்களே!

வளர்ச்சியும் முதுமையும் ஒவ்வொரு தனிநபரும் அனுபவிக்கும் ஒரு இயற்கையான செயல்முறையாகும்.

எம்மை கேட்காமலேயே முதுமை எங்களை நோக்கி வந்துகொண்டே இருக்கிறது. அது எத்தனை பேருக்கு புரிகிறது என்பது ஒரு பெரும் கேள்வி.

பெரும்பாலான மக்கள் சமூகத்தில் முதியவர்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். இன்றை காலத்தில் எமது கிராமத்தில் எத்தனை முதியவர்கள் இருக்கிறார்கள் என்று பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். இன்று முதியவர்களாக இருப்பவர்கள் ஒரு காலத்தில் எங்களைவிட சுறுசுறுப்பாக இந்த மண்ணில் இயங்கியவர்கள், அவர்கள் எங்களுக்காக இந்த மண்ணை வளப்படுத்தியவர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

எங்கள் சமூகத்தின் பாரம்பரிய மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாத்துத் தந்தவர்கள் அவர்கள் தான். அவர்களுக்காக நாம் என்ன கைமாறு செய்திருக்கிறோம். அவர்களுக்காக எத்தனை விழாக்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களின் சாதனைகள் பற்றி எங்கெல்லாம் பேசியிருக்கிறோம்.

முதியவர்கள் எங்களுக்கு பாரமானவர்கள் அல்ல. அவர்கள் பயன்கள் பல தந்தவர்கள். எங்கள் வெற்றியில் அவர்கள் வியர்வையும் இருக்கும், அவர்கள் பிரார்த்தனைகளும் இருக்கும்.

நாம் அவர்களை காணும் போது எப்படி நடந்து கொள்கிறோம். அவர்கள் எங்கள் கவனத்தை எதிர்பார்த்து இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து இருப்பதை விரும்புகிறார்கள்.

"எங்களை கண்டும் காணாதது போல் கடந்த போகிறார்களே" என்ற உணர்வு அவர்களிடம் உருவாக நாம் வழிவகுத்துவிடக் கூடாது.

எமது முதியவர்கள் மரத்தின் வேர்களைப் போன்றவர்கள். அவர்கள் எல்லா நேரங்களிலும் குடும்பத்தையும் சமூகத்தையும் உறுதியாகப் பிடித்து, அவற்றை வலிமையாக்கியவர்கள். அவர்கள் எங்களையும் எங்கள் மண்ணையும் தாங்கியவர்கள்.

அவர்கள் நம் அனைவருக்கும் ஒரு விதமான ஆசீர்வாதம். நம்மில் பலர் அதை உணர்வதில்லை.

முதியவர்கள் எங்கள் மண்ணின் மிகப்பெரிய புதையல்கள். வரலாற்று ஆதாரங்களை இளைய தலைமுறையினருக்கு சொல்லித் தரும் அறிவும் அனுபவமும் அவர்களிடம் களஞ்சியமாகி இருக்கிறது. ஆனால், இப்போதெல்லாம், அவர்களிடம் இருந்து அவற்றை பெற்றுக் கொள்ள முயற்சிப்பவர்கள் மிகவும் குறைவு. மாறாக, இன்று முதியவர்களை சிலர் ஒரு சுமையாகப் பார்க்கத் தொடங்கி விட்டனர்.

நூறு வயதுவரை வாழ்ந்துவிட்டு மரணிக்கும் வயோதிபர்களின் மரணச் செய்திகளை நாம் கேள்விப்படுகிறோம். அவ்வளவு காலம் வாழ்ந்தார்களா? என்று வாய்திறந்து சொல்லி விட்டு மறந்து விடுகிறோம்.

இன்றும் என்பது வயதை, தொண்ணூறு வயதை தாண்டிய முதியவர்களை எங்கள் மண் சுமந்து கொண்டிருந்ததை நம்மில் எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறோம். மரணம் தான் அவர்கள் இவ்வளவு காலம் வாழ்ந்ததை சமூகத்திற்கு செய்தியாக அறிமுகம் செய்வதாக இருக்கக் கூடாது.

அன்பர்களே... நண்பர்களே...

பல முதியோர்கள் எங்களுக்கு தெரியாமல் எங்கள் பிரதேசத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கலாம்.

அவர்களை அடையாளம் கண்டு சமூகத்திற்கு அறிமுகப்படுத்த முன்வருவோம்.

அவர்களின் அனுபவங்களை பெற்று புதிய விடயங்களை கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுவோம்.

அவர்களுடன் அழகாக நேரத்தை செலவிட ஏற்பாடுகள் செய்வோம்.

அவர்களின் அழகான சிரிப்பில் இன்பம் காண ஆர்வம் காட்டுவோம்.

இப்படி செய்யக்கூடியவராக நீங்கள் இருந்தால் நீங்கள் மிகவும் சிறந்த பணியொன்றை செய்கிறீர்கள். அவர்கள் மனதில் அமைதியை அழகை நிலைநாட்டுகிறீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவான்.

முதியவர்கள் எங்களுக்கான ஒரு ஆசிர்வாதம் என்பதை எப்போதும் நினைவில் கொள்வோம். அவர்களுக்கு சமூகத்தில் எப்போதும் மிகச் சிறந்த இடம் இருக்கிறது என்பதை உறுதிப் படுத்துவோம்.

எமக்குள்ளும் ஒரு முதுமை இருக்கிறது என்பதையும் மனதில் நிலைத்து வைப்போம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மங்கையொளி

# உங்கள் பிள்ளைகளுக்கு அதீத செல்லம் கொடுக்கும் பெற்றோரா நீங்கள்!

அதீதச் செல்லங்கொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் தம்முடைய உலகத்திற்குள் யாரையும் அனுமதிப்பதில்லை. யாருக்கும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஒரு கட்டத்தில் அவை பெற்றோரையும் புறக்கணிக்கின்றன.

அன்பு செலுத்துதல் என்பது வேறு, செல்லங்கொடுத்தல் என்பது வேறு என்பதே நமக்குத் தெரியவில்லை.

அரவணைப்பு, கட்டியணைத்தல், தொடர்பில் இருத்தல், தன் வேலையைத் தானே செய்ய ஊக்கப்படுத்துதல், உணர்வுகளை மதித்தல் இவையெல்லாம் அன்பு செலுத்துதலில் அடக்கம். இவை கட்டாயம் குழந்தைக்குத் தரப்பட வேண்டும்.

செல்லங்கொடுத்தல் என்பது குழந்தையால் செய்ய முடிகிற விஷயங்களையும் பெற்றோரே செய்வது,

சதா புகழ்வது, கைகாட்டுகிற எல்லாவற்றையும் வாங்கித் தருவது, அடம்பிடித்தலை ஏற்பது, ஒழுக்கமீறலை ரசிப்பது. பெரும்பாலான பெற்றோர் முன்னதையும் பின்னதையும் குழப்பிக்கொள்கின்றனர்.

குழந்தைக்கு உட்காரத் தெரிந்ததும் உணவை ஊட்டிவிடுவதைப் பெற்றோர் நிறுத்திவிட வேண்டும்.

தட்டில் இருக்கும் சோற்றைச் சிந்திச் சிதறித் தனக்குத் தேவையானதைக் குழந்தையே அள்ளி உண்ணும்.

ஆனால், பாசக்காரப் பெற்றோர் பள்ளி செல்லும் குழந்தை களுக்கும் ஊட்டியே விடுகின்றனர்.

நடக்கத் தெரியும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு திரியக் கூடாது.

குறிப்பாக அப்பாக்கள், வளர்ந்த பிள்ளைகளையும் கைகளில் தூக்கி வைத்திருப்பதை வீதிகளில், கடைகளில் பார்க்க முடியும்.

இதன் பெயர் அன்பன்று. குழந்தை தன் வேலையைத் தானே செய்வதைப் பெற்றோர் தடுக்கின்றனர்.

தத்தித் தத்தி நடக்கும்போதே பெருக்குமாற்றை எடுத்து வீட்டைப் பெருக்க எத்தனிப்பதைப் பார்க்க முடியும்.

பெண் குழந்தை என்றால் இதெல்லாம் இப்பச் செய்ய வேண்டாம் என்கிறோம்.

ஆண் பிள்ளை என்றால் இதெல்லாம் நீ எப்பவுமே செய்யக் கூடாது என்று தடுக்கிறோம்.

ஆனால் குழந்தைகள் பால் பேதமில்லாமல் எல்லா வேலைகளையும் செய்ய விருப்பம் காட்டுகின்றன.

ஆண் பெண் வித்தியாசமில்லாமல், இன்றைய குழந்தைகளுக்கு எந்த வேலையும் செய்யத் தெரியாது என்பதுதான் உண்மை.

துவைப்பது, வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, சமைப்பது போன்ற அடிப்படை வேலைகளுக்கு நாம் அவர்களைப் பழக்கவில்லை.

வீட்டு வேலைகளைக் கற்பது பெண் குழந்தைகளின் சுமையாக இருந்த அவலம் தற்போது மாறிவருகிறது.

இன்றைய இளைஞர்கள் பைப் கசிந்தால் சரிசெய்வது, ட்யூப் லைட்டை மாற்றுவது போன்ற சாதாரணப் பணிகளுக்குக்கூட யீ-ஐத் திறந்து ஆளைத் தேடுகின்றனர்.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பிளம்பிங், எலக்ட்ரிக்கல் வேலைகளைக்கூட அவர்களுக்கு நாம் கற்பிக்கவில்லை.

வீட்டில் செய்வதற்கு எந்த வேலையும் இல்லாததால் அவர்கள் பிற்பகல் வரை உறங்குகின்றனர்.

நள்ளிரவு கடந்தும் செல்ஃ போனில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இதனால், சோம்பேறித் தலைமுறையாக இன்றைய இளைஞர்கள் தலையெடுத்ததன் காரணம் நமது செல்லங்கொடுத்தல்.

வீட்டில் என்ன வேலை என்றாலும் அம்மாவோ அப்பாவோதான் செய்ய வேண்டும்.

ஒரு நாள் மிக்ஸி போடும்போது ஹை வோல்டேஜ் ஆகி ஃப்யூஸ் போய்விட்டது.

டம்மென்ற சத்தத்தைக் கேட்டுக்கூட அவன் அறையை விட்டு வெளியே வரவில்லை.

ஒருமணி நேரம் கழித்து, உள்ளே இருந்து அவனது குரல் மட்டும் வந்தது, ஹஅம்மா, ஏ.சி ஓடல'. நாள் முழுவதும் அந்த ஆன்ட்டிதான் மாறி மாறி போன் செய்து ஆள்களைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்.



அந்த இளைஞன் படுத்தே கிடந்தான்.

அண்மையில் விசாரித்தபோது தெரிந்தது, அவனுக்கு மணமான சில மாதங்களிலேயே விவாகரத்தாகி அம்மா வீட்டில் இருக்கிறானாம்.

செல்லங்கொடுத்து வளர்க்கப்படுகிறவர்களோடு வாழ்வது மிகவும் கடினம்.

சோம்பேறித்தனமும், தான் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும் என்ற ஆதிக்க உணர்வும் அவர்களிடம் மேலோங்கி இருக்கும்.

குடும்பங்களில் ஆண் பிள்ளைகள் செல்லத்தால் சீரழிக்கப்பட்டனர்.

இப்போது பெண் குழந்தைகளுக்கும் அது பரவிவருகிறது.

நான் முன்பு ஒரு பத்திரிகையில் பணிபுரிந்த போது, கல்லூரி படிக்கும் மகள்களைக் கொண்ட தந்தை ஒருவர் சக ஊழியராக இருந்தார்.

மூத்த மகளை இன்ஜினீயரிங் சேர்ப்பதற்குப்பட்ட கடனை அவர் அடைத்து முடிக்கும் போது திருமணம் செய்துவைக்க வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.

மகள் பேரில் 30 பவுன் நகை சேர்த்து வைத்திருந்தார்.

ஆனால், அந்தப் பெண், தனக்கு நூறு பவுன் நகை போட வேண்டுமென்று தந்தையிடம் டிமாண்ட் செய்தாள்.

அதற்காக ஊரில் உள்ள சொத்தை விற்கச் சொல்லி அடம்பிடித்தாள்.

ஹஅதை உன் தங்கைக்காக வைத்திருக்கிறேன்' என அவர் சொன்ன போது, ஹஅவளுக்கு இந்த வீடு இருக்குல்ல' என்றாளாம்.

ஹஎங்கள பத்தி அவ கொஞ்சம்கூட யோசிக்க மாட்டேங்கிறா' என்று புலம்பினார்.

கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துப் பழக்கப்படுத்தினால், ஒரு கட்டத்தில் பிள்ளைகள் உயிரையும் கேட்பார்கள். கொடுப்பீர்களா?

செல்லங்கொடுக்கும் பெற்றோர் நல்லொழுக்கத்தைவிடக் குழந்தைகளின் திறமைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

ஒவ்வொரு குழந்தையும் தனிமனிதராக வளர்ந்தாக வேண்டும்.

எவ்வளவுதான் பொத்திப் பாதுகாத்து வளர்த்தாலும் ஒரு புள்ளியில் தன் வாழ்க்கையை, தன் தோல்விகளை, தன் பிரச்னைகளைத் தானே சமாளித்தாக வேண்டும்.

ஆனால், நமது அதீதப் பாதுகாப்பு வளர்ப்பு முறையால் அவை திக்கற்று நிற்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

செல்லமாக வளரும் பிள்ளைகளால் வாழ்வின் உண்மைகளை ஏற்க முடியாது.

குழந்தைகளைக் கைக்குள்ளிருந்து விடுதலை செய்யுங்கள்.

அவர்கள் சிரமப்படட்டும்.

எப்போதும் ஏ.சி போட்டு வைத்திருந்தால் வெயிலுக்கும் குளிருக்கும் எப்படி அவை பழகும்!

வெளியே கூட்டி வாருங்கள்.

வெறுங்காலில் நடக்கச் சொல்லுங்கள்.

பொதுப் போக்குவரத்தில் பயணிக்கட்டும்.

துணிகளை மடிப்பது, இஸ்திரி போடுவது (வளர்ந்த பிள்ளைகளை) புத்தகங்களை அடுக்குவது, ஷெல்ஃ பை க்ளீன் செய்வது போன்ற தம் வேலைகளைத் தாமே செய்யட்டும்.

பொருள்களைக் கேட்டால் ஹநோ' சொல்லுங்கள். அன்பைக் கேட்டால் அள்ளித் தாருங்கள்.

குழந்தைகள்மீது பெற்றோர் எடுத்துக்கொள்ளும் உரிமைதான் செல்லங்கொடுத்தல்.

பிரதிபலனாக, தான் என்ன சொன்னாலும் கேட்டு நடக்க வேண்டுமென மூளையை கண்டிஷன் செய்யும் சுயநலனே அதில் நிறைந்திருக்கிறது.

தானே உலகம் என்று வாழ்ந்தால் போதும் என நினைக்கின்றனர்.

ஆனால், பெற்றோரின் காலத்திற்குப் பின்னரும் இந்தப் பூமியில் குழந்தை ஒரு தனிமனிதராக, சமூக விலங்காக வாழ்ந்தாக வேண்டும்.

கைகளிலிருந்து வெளியேறிக் கல்வி கற்கவும், பொருளீட்டவும், தனக்கெனத் துணையை அமைத்துக்கொள்ளவும், போகும் இடங்களில் நல்ல மனிதராக அறியப்படவும் வேண்டும்.

அந்தச் சமூக வாழ்க்கைக்கு வெகுமுன்னரே தயார்படுத்துங்கள்.

நிறைய மனிதர்களுடன் பழகி, கலந்து, வாழும் வாழ்க்கைதான் ஆரோக்கியமானது. அப்படியான வாழ்க்கைக்கு நல்லொழுக்கமே ஆதாரம். அதைக் கற்பியுங்கள்.

உங்களின் கண்டிப்புகளும் இல்லைகளும் அதைத் தன் காலில் நிற்கப் பழக்கட்டும்!



அரபாத் பஹுர்தீன்



## முக்கோண ஒருநாள் தொடர்:

# சதீரவின் சதத்தினால் ஆப்கானை வென்றது இலங்கை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்று வரும் 3 அணிகள் பங்கேற்கும் ஒருநாள் தொடரின் 2ஆவது லீக் போட்டியில் சதீர சமரவிக்ரமவின் அசத்தல் சதத்தின் உதவியுடன் 6 விக்கெட்டுக்களால் ஆப்கானிஸ்தான் ஏ அணியை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் முன்னிலையில் தொடர்கிறது இலங்கை ஏ அணி.

இலங்கை ஏ, அயர்லாந்து ஏ மற்றும் ஆப்கானிஸ்தான் ஏ ஆகிய 3 அணிகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஒரு அணி மற்றைய இரு அணிகளுடனும் தலா இரு முறை லீக் ஆட்டத்தில் பங்கேற்கிறது. பின்னர் புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் இத் தொடரின் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடாத்தும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி அயர்லாந்து அணியுடன் மோதி அப் போட்டியால் 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் 2 புள்ளிகளைப் பெற்று தரநிலையில் முதலிடம் பிடித்தது.

பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2ஆவது லீக் போட்டியில் இலங்கை ஏ அணி , ஆப்கானிஸ்தான் ஏ அணியை டுபாய் மைதானத்தில் வைத்து எதிர்கொண்டது. இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் ஏ அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு டில்ஷான் மதுசங்க மற்றும் முஹம்மட் ஷிராஸ் ஆகியோரின் வேகம் இடையூராக அமைய நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் தனித்துப் போராடிய டர்விஷ் ரஸுலி பெறுமதியான 155 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் டில்ஷான் மதுசங்க 4 விக்கெட்டுகளையும், முஹமட் ஷிராஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆப்கானிஸ்தான் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 249 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை ஏ அணிக்கு முன்வரிசை வீரர்களான கமில் மிஷார மற்றும் நுவனிந்து பெர்னான்டோ ஆகியோர் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர். இருப்பினும் ஆரம்ப வீரராகக் களத்திலிருந்த லஹிரு உதார 3 ஆவது விக்கெட்டில் அணித்தலைவர் சதீர சமரவிக்ரமவுடன் இணைந்து இலங்கை அணியை வெற்றியின் பக்கம் அழைத்துச் சென்றனர். இதனால் இலங்கை ஏ அணி 41.3 ஓவர்களில் வெறும் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியை பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் பெறுப்புடன் ஆடிய அணித்தலைவர் சதீர சமரவிக்ரம ஆட்டமிழக்காமல் 129 ஓட்டங்களையும், லஹிரு உதார 81 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹாலித் அஹமட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 4 புள்ளிகளுடன் முதல் இடத்தில் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர்:

# காலிறுதிக்குள் தடம் பதித்தார் சிட்சிபாஸ்



உலகப் புகழ்பெற்ற பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் சுப்பர் 16 சுற்றில் அமெரிக்க வீரரான கொர்டாவை 7:6, 6:4 என்ற நேர் செட்களில் வீழ்த்திய கிரீஸின் சிட்சிபாஸ் காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

உலக டென்னிஸ் போட்டிகளில் மிக முக்கிய தொடராக வர்ணிக்கப்படுகின்ற பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரின் நடப்பு ஆண்டுக்கான போட்டிகள் கடந்த 12ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெற உள்ளது.

இதில் ஆடவர் ஒற்றையர் மற்றும் ஆடவர் இரட்டையர் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டதாக போட்டிகள் இடம்பெறுகின்றன. அந்தவகையில் முதல் சுற்று மற்றும் 2ஆவது சுற்று முடிவில் தற்சமயம் சுப்பர் 16 சுற்று இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய சுப்பர் 16 சுற்றின் ஒரு ஆட்டத்தில் கிறீஸின் நட்சத்திர வீரரான சிட்சிபாஸ் அமெரிக்காவின் கொர்டாவை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக ஆரம்பித்த ஆட்டத்தின் முதல் செட்டில் இரு வீரர்களும் மாறி , மாறி புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் உச்ச கட்ட விறுவிறுப்பை அடைந்தது. இருப்பினும் சுதாகரித்து ஆடிய சிட்சிபாஸ் முதல் செட்டை 7:6 என கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

பின்னர் தொடர்ந்த 2ஆவது செட் ஆட்டத்தில் தன் வலமையான ஆட்டத்திற்குத் திரும்பிய சிட்சிபாஸ் கொர்டாவின் அடிகளை மிக இலகுவாக எதிர்கொண்டதுடன் , வேகமான அடிகளையும் வெளிப்படுத்த தீர்மானிக்க 2ஆவது செட்டை 6:4 என வெற்றி கொண்டு அசத்தியதுடன் 7:6 மற்றும் 6:4 என்ற நேர் செட்களில் சிட்சிபாஸ் வெற்றி பெற்று பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்குள் தடம் பதித்தது அசத்தினார்.

## கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில்

# வயம்ப டஸ்கர்ஸ் கிரிக்கெட் கழகம்

## செம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது



நீர்கொழும்பு மூவர்ஸ் கிரிக்கெட் கழகத்தினால் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட 100 பந்துகள் கொண்ட கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வயம்ப டஸ்கர்ஸ் கிரிக்கெட் கழகம் செம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.

12 அணிகள் பங்கு பற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டி நீர்கொழும்பு திம்பிரிகஸ்கொட்டுவவில் அமைந்துள்ள மாரிஸ்டெல்லா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டிக்கு குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த வயம்ப டஸ்கர்ஸ் அணியும் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த நேட்டிவ் கிரிக்கெட் கழகமும் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப டஸ்கர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 100 பந்துகளுக்கு முகம் கொடுத்து 08 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் அணித்தலைவர் சரோத் 20 பந்துகளுக்கு 34 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜஃப்ரான் 20 பந்துகளுக்கு 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நேட்டிவ் கிரிக்கெட் கழகம் 100 பந்துகளை முகம் கொண்டு சகல விக்கட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

இதில் வயம்ப டஸ்கர்ஸ் அணி சார்பாக முஸர்ரஃப் 03 விக்கெட்டுகளை பெற்றுக் கொண்டார். இத்தொடரின் முடிவில் சாம்பியன் பட்டத்தை சுவிகரித்துக் கொண்ட வயம்ப டஸ்கர்ஸ் கழகத்திற்கு 250,000 ரூபாய் பணப்பரிசும் பெறுமதியான வெற்றி கேடயமும் வழங்கப்பட்டது.

இப்போட்டியின் மற்றும் தொடரின் சிறப்பாட்டக்காரராக முஸர்ரஃப் தெரிவு செய்யப்பட்டார்.

## "Ugap Cricket Fiesta 2025"

# மகுடம் சூடியது ரோயல் செலஞ்சஸ்




புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பின் (Ugap) ஏற்பாட்டில் கிரிக்கெட் தொடர் போட்டி 15 ஏப்ரல் 2025 அன்று R4 Futsal மைதானத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

பல அணிகள் கலந்துகொண்ட இப்போட்டியில், வீரர்களின் ஆற்றல், ஒற்றுமை மற்றும் போட்டித் தகுதி பாராட்டத்தக்கவையாக இருந்தது.

அந்தந்த ஆட்டங்களின் நேர்மையான நடத்தை மற்றும் துல்லியமான முடிவுகளுக்காக அம்ஜத் மற்றும் பைஸ ரான் ஆகியோர் நடுவராகளாக பணியாற்றினர்.

இந்நிகழ்வின் அதிதிகளாக Asian football federation 'B' license coach , Open University of Srilanka (Puttalam study centre) Assistant Director ஜிப்ரி மற்றும் 2024 ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் காற்பந்தாட்ட போட்டிழல் முதலிடம் பெற வட்டாலை அசன் குத்தூஸ் பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளரும், பக்கபலமாக இருந்தவர்களுள் முக்கியமானவருமான எம். அக்மல் மற்றும் தற்போதைய Sepak Takraw இலங்கை அணியின் தற்போதைய தலைவர் மற்றும் கற்பிட்டி , வனாதிவில்லு பிரதேச சபைகளுக்கான விளையாட்டு அதிகாரி (sports officer) டி.எச்.ஏ. ஷக்கி அஹமட் பங்கேற்று விழாவை சிறப்பித்ததோடு, அனைத்து அணிகளுக்கும் ஊக்கத்தையும் பாராட்டையும் வழங்கினர்.

போட்டியின் இறுதியில் ரோயல் சேலஞ்சர்ஸ் அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்ற, யங் ஹிட்டர்ஸ் அணி இரண்டாம் இடம் பெற்றது. சிறந்த பந்துவீச்சாளர் விருதை நிஷ்கான் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீருக்கான விருதை முஸர்ரப் ஆகியோர் வென்றனர்.

இந்த விழா, விளையாட்டு பரிமாற்றம் மட்டுமின்றி ஒற்றுமையையும் உறவுகளைப் பெரிதும் வலுப்படுத்திய நிகழ்வாக அமைந்தது.